பக்கங்கள்: 12+IV = பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 1 ஞாயிற்றுக்கிழமை (17-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:355

யாழ்.மாவட்டம்

# பாதுகாப்பு உப குழுக் கூட்டம் முடிவேதும் எடுக்காமல் முடிவு!

## முகமாலை சூனியப்பிரதேசத்தில் நேற்று 8 மணி நேரம் நடந்தது

யாழ்ப்பாணம்,நவம்பர் 17

**முகமாலை சூனியப்பிரதேசத்தில் நேற்று முழுநாளும் இடம்பெற்ற பாதுகாப்பு உப குழுவின் யாழ்.மாவட்டக் கூட்டம் எந்த முடிவுகளும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தது.**

**மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிசெய்யும் வகையில் தம்மால் முன்வைக்கப்பட்ட எந்தக் கோரிக்கைக்கும் சாதகமான பதில் தரப்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.**

தாய்லாந்தில் அரசு பிரதிநிதிகளுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட பேச்சுக்களின்போது மூன்று உப - குழுக்கள் அமைக்கப்பட்டன.

அரசியல் பிரச்சினை தொடர்பாக ஆராய ஓர் உப குழுவும் -

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, அபிவிருத்தி தொடர்பாக ஆராய ஓர் உப குழுவும் -

வடக்கு - கிழக்கு பாதுகாப்பு தொடர்பாக ஆராய மற்றும் ஓர் உப குழுவும் - அமைக்கப்பட்டிருந்தன.

இந்தக் குழுக்களில் அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின்

(02ஆம் பக்கம் பார்க்க)



முகமாலையில் நேற்று நடந்த சந்திப்பில் கண்காணிப்புக் குழு பிரதிநிதி முன்னிலையில் அரசு -- புலிகள் குழுக்களின் தலைவர்கள் கைலாகு கொடுத்த காட்சி.

(மேலும் படங்கள் 2,3ஆம் பக்கங்களில்)

## நேற்றைய பேச்சுக்கள் ஏமாற்றத்தையே தந்தன

### கேணல் தீபன் கருத்து

யாழ்ப்பாணம்,நவ.17

எந்தவித முடிவுகள் இன்றி முடிவடைந்த நேற்றைய பேச்சுக்கள் ஏமாற்றத்தைத்தான் அளித்தன என்று விடுதலைப் புலிகளின் வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்தார்.

முகமாலையில் நேற்று இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக பல விடயங்களை எடுத்துக்கூறினோம். மனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுதல், மக்கள் மீள்குடியமர்வு போன்ற முக்கிய விடயங்கள் குறித்து பலதரப்பட்ட கோரிக்கைகளை நாம் முன்வைத்தோம். ஆனால், எந்தக் கோரிக்கைக்கும் அரச தரப்பால் சரியான முடிவுகள் தெரிவிக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பின் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் என நம்பினோம். ஆனால், ஏமாற்றமே கிடைத்தது. ஆக்கபூர்வமானதாக சந்திப்பு இடம்பெறவில்லை - என்றார் அவர். (ம-3-8)

## பொலீஸ், கடற்படையின் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பியினர் மீண்டும் நெடுந்தீவில்!

### அதிகாலை இருள்சூழ்ந்த நேரத்தில் படகில் வந்து தரையிறக்கம்

யாழ்ப்பாணம்,நவ.17

கடற்படை மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் அதிகாலை வேளை படகில் சென்ற சுமார் 40 ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நெடுந்தீவில் இருட்டோடு இருட்டாக தரையிறங்கி அங்கு மீண்டும் முகாமிட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ஜெகன், பிரதி அமைப்பாளர் நிஷாந்தன் ஆகியோர் தலைமையிலான குழுவே நெடுந்தீவுக்கு வந்துள்ளது. நெடுந்தீவிலிருந்து அண்மையிலேயே ஈ.பி.டி.பியினர் மக்களால் துரத்தியடிக்கப்பட்டிருந்தனர். இதனால் அங்கிருந்து வெளியேறிய அவர்கள் நேற்று அதிகாலை இருட்

(02ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த

## சிங்கள மக்களின் மீள்குடியமர்வு குறித்தும் கூட்டத்தில் பிரஸ்தாபம்

### ஒஸ்ரின் பெர்னாண்டோ தகவல்

யாழ்ப்பாணம்,நவ.17

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், பாடசாலை மாணவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துவது, முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதில் உள்ள சிக்கல்கள், சிங்கள மக்களை வடக்கில் மீளக்குடியமர்த்தல் போன்ற நான்கு விடயங்கள் குறித்து நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய கூட்டம் தொடர்பாக 'உதயனு'க்குத் தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான விடயங்களை எவ்வாறு கையாளுவது, மக்களின் மீள்குடியமர்வு, மக்களின் புனர்வாழ்வு ஆகிய விவகாரங்கள் நேற்றைய கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டன.

(02ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் – பருத்தித்துறை வீதி திறப்புபற்றி ஆராயக் குழு

யாழ்ப்பாணம்,நவ.17

நாகர்கோயில் - பருத்தித்துறை வீதியை பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிடுவது தொடர்பாக ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முகமாலையில் நேற்று நடந்த உப-குழுக்கூட்டத்தில் இதற்கான குழு தெரிவுசெய்யப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் வாழும் மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காண உடனடியாக நாகர்கோயில் - பருத்தித்துறை வீதியை மக்கள் போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் நேற்றைய கூட்டத்தில் வற்புறுத்தினர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு எம்.பிக்கள் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பராராஜசிங்கம், சந்திரநேரு, வெள்ளிமலை ஆகிய மூவரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

பாதுகாப்பு வலயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. மாலை வவுனியா வந்து இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு சென்றனர்.(ம-164)

## ஏழு அமைச்சர்களைப் புதிதாக நியமிக்க ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு,நவ.17

புதிதாக ஏழு அமைச்சர்களை நியமிக்குமாறு பிரதமர் செய்த சிபாரிசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார். இதனால் இந்த விவகாரத்தில் கடந்த சில தினங்களாக பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்றுவந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்தது.

அமைச்சர்கள் நியமனம் தொடர்பாக பிரதமர் ரணிலுக்குக் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி அனுப்பிவைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்









நேற்று முகமாலை சூனியப்பிரதேசத்தில் நடந்த பாதுகாப்பு உப குழு கூட்டத்துக்கு வருகை தந்த அரச, புலிகள் குழுக்களின் தலைவர்களை கண்காணிப்புக்குழு அதிகாரி வரவேற்பதையும் பேச்சுக்களில் கலந்து கொண்ட இரு தரப்புப் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : தேவராஜன்)

# நேற்றைய பேச்சுக்களில் அரசிடமிருந்து சாதகமான பதில்கள் எவையும் இல்லை

## யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையாகவுள்ள காரணிகளுக்கு தீர்வு காண்பதற்கான பல கோரிக்கைகளை கூட்டத்தில் முன்வைத்தபோதும், தங்கள் தரப்புக் கோரிக்கைகளில் ஒன்றுக்காவது அரச தரப்பிலிருந்து சாதகமான பதில் தரப்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

முகமாலையில் நேற்று நடந்த உப குழுக்கூட்டத்தை அடுத்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இப்படிக் கூறினார்.

தமது கோரிக்கைகளுக்கு உடனடித்தீர்வை இராணுவம் வழங்காவிட்டால் மக்களின இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுமென்று தெரிவித்த அவர் புலிகள் தரப்பில் முன்வைத்த கோரிககைகள் குறித்து தெரிவித்ததாவது:-

★ வலி.வடக்கில் சேந்தாங்குளம், கொல்லங்கலட்டி தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கட்டுவன், வறுத்தலைவிளான், தோலகட்டி ஆகிய இடங்களில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கவேண்டும்.

★ தென்மராட்சியில் கரம்பகம், எழுதுமட்டுவாழ், மிருசுவில், தனங்களப்பு ஆகிய பகுதிகள் மக்கள் குடியமர அனுமதித்தல்.

★ யாழ் நகரை அண்டிய கொழும்புத்துறை, அரியாலை கிழக்குப் பகுதிகள், நாவாந்துறை, குருநகர், பாஷையூர் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதித்தல்.

★ குருநகர், பாஷையூர், நாவாந்துறை ஆகிய கரையோரத்தில் கடல பகுதியில் போடப்பட்டுள்ள கம்பிகளை அகற்றல்.

★ அந்தப் பகுதிகளில் உள்ள மீன்வாடிகளைத் திறத்தல்.

★ புரிந்துணர்வு உடன்பாட்டின் முன் வடமராட்சிக் கடற்பகுதியில் மீன் விற்பனை நிலையங்களில் படையினரின் பிரசன்னம் இருந்தது. இப்போது அங்கு படைநிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது உடன்படிக்கையை மீறும் செயல். அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும்.

★ யாழ். நகரப் பகுதியில் இராணுவ நெருக்குவாரங்கள் கூடுதலாக இருப்பதால் ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகளில் உள்ள படையினர் அங்கிருந்து விலக்கப்பட்டு, அந்தப்பகுதியை மக்கள் இயல்பு வாழ்க்கைக்கும், போக்குவரத்துக்கும அனுமதிக்க வேண்டும்.

★ குடாநாட்டில் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ள 25 பாதைகளையும் மக்கள் போக்குவரததுக்கு உடன் திறக்கவேண்டும்.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்காகவே இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தோம். இராணுவம் இவற்றுக்குத் தீர்வு காணாவிட்டால் மக்களின் இயல்புவாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்படும் - என்றார் இளம்பரிதி. (ம-3)

## பொலீஸ், கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோடு இருட்டாக மீண்டும் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளனர். முன்னர் அவர்களது முகாம் அமைந்திருந்த இடத்திலேயே அவர்கள் மீண்டும் முகாமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காலையில் விடிந்த பின்னரே ஈ.பி.டி.பியினர் தரையிறங்கிய விடயம் பொதுமக்களுக்கு தெரியவந்தது. இதனையடுத்து ஈ.பி.டி.பியினரின் முகாமின் முன்பாகத் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேறுமாறும் அவர்கள் கோரினர். நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஈ.பி.டி.பியினர் அங்கிருந்த டிராக்டர் ஒன்றையும் ஜெனரேற்றர் ஒன்றையும் எடுத்துச்சென்றதாகக் கூறப்பட்டது.

ஈ.பி.டி.பியினரின் இந்தச் செயல்கள் குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக நெடுந்தீவுக்கு விரைந்த கண்காணிப்புக் குழு அதிகாரிகள் ஈ.பி.டி.பியினருடனும் பொதுமக்களுடனும கலந்துரையாடினர்.

பொதுமக்கள் பாதுகாப்புக்கு தாம் எந்தவித அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தமாட்டோம் என்று கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் ஜெகன். எனினும், மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் திரும்பினர்.

இந்தச் சம்பவங்களால் நெடுந்தீவில் நேற்று முழுநாளும் பதற்றம் நிலவியது. காலைமுதலே கடைகள் மூடப்பட்டிருந்தன. (ம-4)

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுக்களில் பாதுகாப்பு உபகுழு கடந்த 10ஆம் திகதி ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் கூடியது.

மாவட்டங்களில் காணப்படும் பிரச்சினைகளை நேரில் ஆராய மாவட்டக் குழுக்கள் அமைத்து அவற்றின் சிபாரிசுகளைப் பெற்று முடிவுகளை எடுப்பது என அங்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது, இதன் அடிப்படையில் யாழ்.மாவட்டக் குழுவின் கூட்டத்தை தெல்லிப்பழையில் நேற்று நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான தெல்லிப்பழையில் இக்கூட்டத்தை நடத்தும் பட்சத்தில் புலிகளின் வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அதில் கலந்துகொள்ளமுடியாது என்று புலிகள் தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதையடுத்து இக்கூட்டத்தை முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடத்துவது என்ற முடிவின்படி இக்கூட்டம் நேற்று அங்கு நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை சுமார் 5 மணிநேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது. படைத்தரப்பில் முடிவுகள் எடுக்கக்கூடிய வல்லமை பொருந்திய உயரதிகாரிகள், படைத்தளபதிகள் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் உயர் தளபதிகளும் இதில் பங்குபற்றினர்.

யாழ்.மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக அவசரமாக - அவசியமாக - மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக பல கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர்.

எந்தவொரு கோரிக்கைக்கும் உடனடித்தீர்வு காணப்படாத நிலையில் கூட்டம் முடிவடைந்தது.

இந்தக் கூட்டத்தின் சிபாரிசுகளைத் தயாரிக்கும் பணிகள் சுமார் 3மணி நேர பெரும் இழுபறிக்கு மத்தியில் இடம்பெற்றன. எனினும், முறைப்படி சிபாரிசு எதுவும் தயாரிக்கப்படவிலலை என்று புலிகள் தரப்பு தெரிவித்தது.

அதியுயர் பாதுகாப்பு வலயம், மக்கள் மீள்குடியமர்வு, மீன்பிடித்தல் பிரச்சினை ஆகியன தொடர்பாக தாங்கள் எழுப்பிய கோரிக்கைகளுக்கு தீர்வு காண படைத்தரப்பு மறுத்தது என்றும் -

படிப்படியாகவே அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் அத்தரப்பு தெரிவித்தது என்றும் விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், கூட்டத்தின் இறுதியில் உருப்படியான எந்த சிபாரிசுகளும் அடங்காமல் கூட்டத்தில் நடந்தவை குறித்து விவரிக்கும் அறிக்கை ஒன்றில் அரசு, புலிகள், கண்காணிப்புக் குழு ஆகிய முத்தரப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர். (ம-3-8)

## ஒலிநாடா வெளியீடு ஒத்திவைப்பு

இன்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவிருந்த இசைப்பிரியனின் இசைநெறியாள்கையில் உருவான 'கல்லறை தழுவும் கானங்கள்' ஒலிநாடா அறிமுகவிழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நாகர்கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து இந்தப் பாதையைத் திறப்பது தொடர்பாக ஆராய படையினர், விடுதலைப் புலிகள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அங்கு தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவரும் பார்வையாளர் ஒருவரும், விடுதலைப் புலிகளைச் சேர்ந்த இருவரும் பார்வையாளர் ஒருவரும் அங்கம் வகிப்பர்.

இக்குழு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கூடவிருக்கின்றது.

பாதை திறப்பது தொடர்பாக உப குழுவுக்கு இந்தக்குழு சிபாரிசு செய்யும். (ம-3)

## சிங்கள மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றை ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

நாகர்கோயில் - பருத்தித்துறை வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறப்பது தொடர்பாக ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் சிபாரிசை பரிசீலனை செய்து உரிய தீர்வு காணப்படும்.

இரண்டாவதாக, பாடசாலை மாணவர்களை கல்விச் செயற்பாட்டுக்குப் புறம்பாக ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுவதாகப் படை அதிகாரிகள் முறைப்பாடு செய்தனர். இது பற்றி புலிகள் பிரதிநிதிகளிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் மாணவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதாக புலிகள் பிரதிநிதிகள் உறுதி அளித்தனர்.

மூன்றாவதாக குடாநாட்டுக்கு வரும் முஸ்லிம் மக்களுக்கு விடுதலைப் புலிகள் சில கட்டுப்பாடுகளை விதிப்பதால் அவர்கள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என புலிகளிடம் எடுத்துக் கூறினோம். முஸ்லிம்கள் மீளக்குடியமரவும் வியாபாரம் செய்யவும் அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரினோம்.

முஸ்லிம் மக்கள் இங்கு மீளக் குடியமர்வதை தாங்கள் வரவேற்பதாகவும், அவர்களுக்கு எதிராக எந்த விதச் செயலிலும் தமது அமைப்பு ஈடுபடவில்லை என்றும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதாகவும் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நான்காவதாக, சிங்கள மக்களின் மீள் குடியமர்வு குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது. குடாநாட்டில் வாழ்ந்த 25.ஆயிரம் முதல் 35.ஆயிரம் வரையான சிங்கள மக்கள் மீளக்குடியமர எம்மிடம் விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மீளக்குடியமர நாளையே வரப்போவதில்லை. மீளக் குடியமர்த்தலுக்கான சாத்தியம் குறித்து அறிய விரும்புகிறார்கள் என்று புலிகள் பிரதிநிதிகளிடம் தெரிவித்தோம்.

அதுகுறித்து உரிய நேரத்தில் கருத்துத் தெரிவிப்பதாக புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த நான்கு விடயங்கள் குறித்த சிபார்சுகளை பாதுகாப்பு உப குழுவுக்கு தெரியப்படுத்தவிருக்கின்றோம் - என்றார் அவர். (ம-3)

# அல்கெய்டாவின் முக்கிய உறுப்பினர் அமெரிக்காவிடம்?

## விவரங்களை வெளியிட மறுப்பு

வாஷிங்ரன்,நவம்பர்17

**'அல்கெய்டா' தீவிரவாத வலைப்பின்னல் அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தற்போது தமது பிடியில் இருக்கிறார் என்று அமெரிக்க அதிகாரிகள் நேற்று சனிக்கிழமை தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.**

சில வாரங்களுக்கு முன்னர் கைதான அந்த உறுப்பினரின் பெயர் விவரங்களை வெளியிட அமெரிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

"எங்கே, எப்போது, எப்படி, கைது செய்யப்பட்டார் என்பதை என்னால் கூறமுடியாது" - என்று தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

நாட்டுக்கு வெளியே மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு தேடுதல் நடவடிக்கையின் போது அவர் சிக்கினார். இப்போது அவர் அமெரிக்கப்படைகளின் கைகளில் இருக்கிறார் - என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

'அல்கெய்டா' தலைவர் ஒஸாமாபின்லேடனின் வலது கரமாகத் திகழும் அவரது முக்கிய சகாவான அய்மன் அல் ஷவாகிர் அல்லது அமைப்பின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தலைவர் ஹாலிட் ஷெய்க் முஹமட் அல்லது பின்லேடனின் புதல்வரான சாட் ஆகிய மூவரில் ஒருவரே அமெரிக்காவிடம் சிக்கியிருக்கக் கூடும் என்று சில வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (ஐ)

# சலவை இயந்திரத்தினுள் தவறி வீழ்ந்தாள் சிறுமி!

## உடலில் நூற்றுக்கு மேற்பட்ட காயங்கள்

கலிபோர்னியா,நவ.17

அமெரிக்க களஞ்சிய அறை ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த பாரிய சலவை இயந்திரத்தினுள் சிறுமி ஒருத்தி அகப்பட்டுக் கொண்டாள்.

கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த ஜூலியன் ஹெர்ணண்டஸ் என்ற ஆறு வயதுச் சிறுமியே இவ்வாறு சலவை இயந்திரத்தினுள் தவறி வீழ்ந்தாள். சலவை இயந்திரத்தினுள் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த இச்சிறுமி பின்னர் அவ்வழியால் வந்த நபர் ஒருவர் கண்டு மீட்டெடுத்தார்.

இச்சம்பவம் குறித்து லோங்பீச் பொலீஸார் தகவல் தருகையில் -

சலவை இயந்திரத்தைப் பார்க்க விரும்பிய சிறுமி, அதன் முன்பகுதியில் ஏறினாள். அச்சமயம் இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் இருந்தது. சிறுமி தவறி உள்ளே விழுந்ததும் இயந்திரம் செயற்பட, கதவுகள் மூடிக் கொண்டன. உள்ளே நீர் நிரம்பத் தொடங்கியது. சிறுமியோ நீரில் த்த் தளித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது, அவ்வழியால் சென்ற கிலியம் ஹெரம் என்ற நபர் சிறுமியின் அலறல் சத்தத்தைக் கேட்டார். உடனடியாக தனது காரிலிருந்த இரும்புத் தடியை எடுத்து சலவை இயந்திரத்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினார். நீரில் மூழ்க முன்னதாக சிறுமியைக் காப்பாற்றினார்.

"சலவை இயந்திரத்தினுள் குழந்தை ஒன்றை நான் பார்த்தேன். இயந்திரம் இயங்கிக் கொண்டே இருந்தது. சிறுமியை எப்படியாவது வெளியே கொண்டு வர வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது."

- இவ்வாறு அச்சிறுமியை காப்பாற்றிய கிலியம் ஹெரம் கூறினார்.

இச்சம்பவத்தில் சிறுமியின் முகம், கை மற்றும் பின்புறப் பகுதிகளில் நூறுக்கும் அதிகமான காயங்கள் ஏற்பட்டு தையல்கள் போடப்பட்டன. கிலியம் ஹெரம்மின் கைகளிலும் பலத்த காயம் ஏற்பட்டது. (ஐ-9)

# 12 இஸ்ரேலியர்கள் ஹெப்ரோனில் பலி!

## 'இஸ்லாமிய ஜிகாத்' குழுவினர் அதிரடி

ஹெப்ரோன் மேற்குக்கரை,நவ.17

மேற்குக்கரை நகரமான ஹெப்ரோனில் பலஸ்தீன தீவிரவாதிகள் மறைந்திருந்து நடத்திய ஒரு தாக்குதலில் உயர் படை அதிகாரிகள் உட்பட 12 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

வழமையான பிரார்த்தனை கடமையில் ஈடுபட்ட பின்னர் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த இஸ்ரேலியர்களே தாக்குதலுக்கு இலக்காகி இருக்கின்றனர்.

தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் பலஸ்தீனத் தீவிரவாதிகள் மூவரின் சடலங்களை இஸ்ரேலியப் படையினர் மீட்டிருக்கின்றனர் என்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. இந்தச் சம்பவத்தில் இஸ்ரேலியப் பொதுமக்கள் 16 பேருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களில் மூவர் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை தாங்களே நடத்தியதாக பலஸ்தீன தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய ஜிகாத் என்ற அமைப்பு உரிமை கொண்டாடி இருக்கிறது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் காஸா நகரில் உள்ள பலஸ்தீன தொழிற்பேட்டை ஒன்றின் மீது ஏவுகணைகளை வீசித் தாக்கியிருக்கின்றன. சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. அமெரிக்கத் தயாரிப்பான அபாசி ரக தாக்குதல் ஹெலிகொப்டர்கள் இத்தாக்குதலை நடத்தியதாக அங்குள்ள சீ.என்.என் செய்தியாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதல் நடப்பதற்கு முன்பாக வெள்ளிக்கிழமை காலையில் 16 வயதான பலஸ்தீன சிறுவன் ஒருவனை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். (ஐ)



ஹெப்ரோனில் இஸ்ரேலியப் படையினர் மீதான தாக்குதலில் பலியானதாகக் கூறப்படும் பலஸ்தீன தீவிரவாதி ஒருவரின் சடலம்.



பலஸ்தீனர்களின் தாக்குதலில் காயமடைந்த இஸ்ரேலியர் ஒருவர் ஹெப்ரோனில் இராணுவ அம்புலன்ஸில் ஏற்றப்படுகிறார். (ஐ)

### அமெரிக்காவில் எதிர்க்கட்சி தலைவராகப் பெண்

வாஷிங்ரன்,நவ.17

அமெரிக்காவில் அண்மையில் நடந்த இடைத்தேர்தல்களில் ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்ததில் நாடாளுமன்றத்தில் அதன் பெரும்பான்மையை இழந்தது. இதனை அடுத்து கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் ரிச்சர்ட் கெபார்ட் மாற்றப்பட்டார். அவரது இடத்துக்கு புதிய தலைவராக நான்ஸி பெலோசி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஒரு கட்சியின் நாடாளுமன்றத் தலைவராகப் பெண்

உலக அரங்கில்

ஒருவர் பதவி வகிப்பது இதுவே முதற்றடவை.

நான்ஸி, சான்பிரான்சிஸ்கோவைச் சேர்ந்தவர். அங்கிருந்தே நாடாளுமன்றத்துக்கும் தெரிவானவர்.

ஜனாதிபதி புஷ்ஷின் ஈராக் தொடர்பான கொள்கைகளைத் தீவிரமாக எதிர்ப்பவர்களில் ஒருவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நேற்றைய முகமாலைச் சந்திப்பின்போது....







நேற்றைய சந்திப்பின்போது அரசுத் தரப்புக்கு தலைமைதாங்கிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதி ஒலே பெத்தம், விடுதலைப் புலிகளின் வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதையும் மேலுள்ள படத்தில் காணலாம். அருகே உள்ள படங்களில் படையினரும் விடுதலைப் புலி உறுப்பினர்களும் வேற்றுமை மறந்து ஒன்றுபட்டு நிற்பதையும் விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் சிங்களப் பத்திரிகையை படையினர் இருவர் வாசிப்பதையும் காணலாம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



எமது அன்புத் தெய்வம்

திருமதி

**மனோன்மணி வைரமுத்து**

தோற்றம் 03-11-1912 மறைவு 18-10-2002

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (17-11-2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்வதுடன், அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திலகவதி (மகள்),
தனபாலசிங்கம் (மருமகன்),
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (10649)

*ஞானவைரவர் கோயில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம் 23 - 04 - 1989



விண்ணுலகம் 01 - 12 - 1998

**செல்வி வர்ணனி சுந்தரேசன்**

திதி 17-11-2002

*4ஆவது சிரார்த்தத்தில் நெஞ்சுருக நினைவு கூருகின்றோம்.*

அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உறவினர்கள்.

*இல.139, 3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(10666)

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய (சபிண்டீகரண) அழைப்பும்

மண்ணகம் 17 - 09 - 1932



விண்ணகம் 10 - 10 - 2002

**திருமதி கதிர் தணிகாசலம் கௌசல்யாதேவி**


அன்பாய், ஆதரவாய், பண்பாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்பிற்குரிய இல்லத்தரசியின் வீட்டுக்கிருத்தியம் (சபிண்டீகரணம்) 19-11-2002 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அத்துடன் அன்றையதினம் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றுவதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

'கலைஞானகேசரி' கதிர் தணிகாசலம் J.P. யும்
குடும்பத்தினரும். (10659)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



எமது அன்புத் தெய்வமான அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பூசகரின் அன்புக் கணவர்

**அமரர் இராசையா குணலிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (18-11-2002) திங்கட்கிழமை பகல் 1.00 மணிக்கு, எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- வசந்தி அம்மன்

*ஏழாலை மத்தி, ஏழாலை.* (10657)

## வலி.மேற்கில் சமுர்த்தி வங்கி நிறுவப்படும்

சண்டிலிப்பாய்,நவ.17

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இரு சமுர்த்தி வங்கிகள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

வட்டுக்கோட்டையிலும் சித்தன்கேணியிலும் இந்த சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளன என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.17

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழா வைபவமும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏழூர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த வைபவத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவு உரையை யாழ். இந்து கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவ மகாலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.(ம-ரி)

## வைத்தீஸ்வராவுக்கு பழைய மாணவர் சங்கம் நிதியுதவி

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையினர் கல்லூரியிலிருந்து இவ்வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஏழு மாணவர்களுக்கு தலா 7 ஆயிரம் ரூபாவை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கியுள்ளனர்.

அத்துடன், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மூன்று 'ஏ'யைப் பெற்ற மாணவி ஒருவருக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபாவும் மேற்படி கிளையினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி லண்டன் கிளை வழங்கிய ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவைப் பயன்படுத்தி கல்லூரிக்கு சுற்று மதில், கேற், பெயர்ப் பலகை ஆகியன நிறுவப்பட்டுள்ளன என கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தெரிவித்தார். (எ-135)


**இலகு ஆங்கில பாடநெறி தபால் மூலம்**

சரளமாக எழுத, பேச, வாசிக்க 90 நாள்கள் பாடநெறி

Diploma/ Basic English

இப்பாடநெறியானது குறுகிய காலத்தில் விரிவான ஆங்கில அறிவை வீட்டில் இருந்தவாறே கற்றுக்கொள்ளமுடியும். இப்பாடநெறியை கற்றுக்கொள்ள வயதுக் கட்டுப்பாடோ ஆங்கில முன்னறிவோ தேவையில்லை.

**பாடநெறிக் கட்டணம் இலவசம்**

பாடநெறி முடிவில் Diploma in English சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 8/- பெறுமதியான (4) நான்கு முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**

*P.O.Box: 083, Kandy.*
*Tel: 077 - 802849* (10467)


## வாழ்த்துகின்றோம்



யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமத்தொழில் நியாயசபை செயலாளர், உதவியாளராகக் கடமையாற்றி இன்று 17.11.2002 இல் ஓய்வுபெறும்

**செல்வி பரமேஸ்வரி சேதுபதி**

*B.A.(Ceylon)*

அவர்கள் அவரது பிறந்ததினமாகிய இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை என்றும் இறைவனின் அருளும் ஆசீர்வாதமும் பெற்று நற்சுகத்துடன் வாழவேண்டுமென்று மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

*தும்பளை,*
*பருத்தித்துறை.* (10354)

- குடும்பத்தினர்.


**PRIMA**

கோழித்தீன், மாட்டுத்தீன், பொதிசெய்யப்பட்ட கோழி இறைச்சிகள், கோழி இறைச்சிப்பாகங்கள், பிறிமா நூடில்ஸ் வகைகள், எண்ணை வகைகள் மற்றும் பிறிமா தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த விலையில் கூடிய கழிவுகள் தரப்படும்.

யாழ் நகரின் ஏக விநியோகஸ்தர்கள்:

**பிறிமா (Prima) நிறுவனம்,**
144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(10661)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அருட்குமரன்**
**(கப்டன் இளங்கதிர்)**

மலர்வு: 02-12-1979 உதிர்வு 28-11-2001

திதி: 17.11.2002 (திரயோதசி)

*மண்ணுக்காய் மரணித்த மாவீரனே! - உன் நினைவுகள் மறைவதில்லை.*

*நிலைத்தேயிருக்கும்!!*

*கே.கே.எஸ். வீதி,*
*நந்தாவில்,*
*தாவடி.* (10494)

யோகேந்திரன் - சாந்தரூபி,
சற்குணம் - யோகராணி
குடும்பத்தினர்.

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

| 15ஆம் ஆண்டு | | 14ஆம் ஆண்டு |
|---|---|---|
| அமரர் **விநாசித்தம்பி கணபதிப்பிள்ளை** (முன்னாள் கடவத்தை கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) | | அமரர் **கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன்** (லெப்டினன்ட் நந்தன்) |
| 19.04.1929 ← | மலர்வு | → 23.02.1969 |
| 17.11.1987 ← | உதிர்வு | → 01.11.1988 |

*ஆண்டுகள் பதினைந்து ஆயிற்றோ அந்தோ உமைப்பிரிந்து மாண்டு நீங்கள் போனதால் மனை செயலிழந்து போயிற்றே! தூண்டாமணி விளக்காய் துலங்கிய உமை நினைந்து ஈண்டிங்கு நாம் தவிக்கின்றோம் உங்கள் நினைவுகளில்.*

என்றென்றும் நினைவுகளுடன்:
க.உமாதேவி

*ஆலடி, காரைநகர்.* (சி-24889) *நீலிப்பந்தனை, காரைநகர்.*

## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கு "இக்ராட்" எம் 7 (ICTAD M7) அல்லது அதற்கு மேல் பதிவுசெய்தவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரத்தை 18.11.2002 முதல் சங்கப் பொதுமுகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரம் 25.11.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல்வேண்டும். அன்றையதினமே 12.30 மணிக்கு கேள்விப் பத்திரம் திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| தலைமைக் காரியாலய மேல்மாடி அமைத்தல் | ரூபா 5,000.00 | ரூபா 500.00 |

வரைபடம் மற்றும் வேலைத்தளம் ஆகியவற்றைக் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
**திரு.த.இராஜசிங்கம்**
பொதுமுகாமையாளர்

*பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)*
*முதலாம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.*
*15.11.2002.*

(சி-24897)

உதயன்

## மீண்டும் பழைய கதை

'கெடுவான் கேடு நினைப்பான்'.

தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து, பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெளியிட்டிருக்கும் கருத்து, இந்தப் பழமொழியைத்தான் நினைவூட்டுகின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளில் தங்களையும் நேரடியாகப் பங்குதாரர்களாகச் சேர்த்துக்கொள்ளாவிட்டால், இந்தச் சமாதான முயற்சிகள் நிறைவேற்றப்படவிடாமல் - செயலுருப்பெறவிடாமல் - தடுப்போம் என்று பொ.ஐ.முன்னணி எச்சரித்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் அந்த முன்னணி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தக் கருத்துக்களை தமிழரின் 'கோடரிக் காம்பு' என்று கருதப்படுகின்ற அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அவரது சகாக்களும் வெளியிட்டிருக்கின்றனர்.

"சமாதானப் பேச்சுக்கள்மூலம் காணப்படும் தீர்வை, செயலுருப்பெறச் செய்வதாயின், அது தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய அரசமைப்புப் பொதி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும். அரசு எங்களை ஒரு பொருட்டாக மதித்து தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் எங்களையும் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இல்லையேல், சம்பந்தப்பட்ட அரசமைப்புப் பொதிக்கு ஆதரவு தராமல் நிராகரித்து, அதை நிறைவேறவிடாமல் தடுப்போம்" - என்று எச்சரித்திருக்கின்றது பொ.ஐ.முன்னணி.

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான விடயத்தில் முக்கிய தரப்புகள் இரண்டு.

வாழ்வியல் உரிமைக்காகப் போராடும் தமிழர்கள் ஒருபுறம். அடக்கியாளும் சிங்களவர்கள் மறுபுறம்.

தமிழர்களைப் பொறுத்தவரை போராட்டத்திலும், தற்போதைய சமாதான முயற்சிகளிலும் ஒன்றுபட்டு, ஐக்கியப்பட்டு, ஒரு தலைமையின்கீழ் அவர்கள் அணிதிரண்டுள்ளனர்.

அடக்கி அரசாட்சி நடத்தும் சிங்களவர் தரப்போ, எப்போதும் இரண்டு பிரதான பிரிவுகள் உட்பட பல குழுக்களாகப் பிரிந்து நின்றன; நிற்கின்றன.

இந்தச் சிங்களத் தலைமைகள் எப்போதும் ஒன்றுபடப்போவதில்லை. தங்களுக்குள் இணைந்து - ஒரே குரலில் - தமிழருக்கு ஒரு தீர்வை முன்வைக்கப்போவதில்லை என்பதே நடுநிலை அவதானிகளின் கருத்தாக இருந்து வந்திருக்கின்றது.

இப்படி இணைந்து ஒரு வாய்ப்பான தீர்வை வைக்க முடியாத சிங்களத் தலைமைகளின் கையாலாகத்தனமே, சர்வதேச அரங்கில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தப்போவதாகவும், தமிழர்களின் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்துக்கும், பெரும் பலத்துக்கும் அடிப்படையாக அமையப்போகின்றது எனவும் நடுநிலைப் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

அது நிஜமாகிப் போவதை மீண்டும் உறுதிப்படுத்தும் ஒரு நிலை இப்போது வந்திருக்கின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளைத் தானே ஆரம்பித்ததாக ஜனாதிபதி குமாரதுங்க அவ்வப்போது பீற்றிக்கொள்ளத் தவறுவதில்லை. அதில் உண்மை இல்லாமலும் இல்லை.

அந்த முயற்சிகளை ஆரம்பித்தபோது, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்த சமாதான முயற்சிகளில் பங்கு, பணி என்னவென்பது குறித்து - இன்றுபோல் அன்றும் - பிரச்சினை எழாமல் இருக்கவில்லை.

அச்சமயம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முயன்று கொண்டிருந்ததாகக் கூறிய அரசுத் தலைவர் ஜனாதிபதி குமாரதுங்க, அப்போதைய எதிரணித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இது குறித்து ஓர் உடன்பாட்டுக்கு வந்தார். பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் ஏற்பாட்டில், இது தொடர்பாக இருவரும் ஓர் ஒப்பந்தத்தில்கூட கையெழுத்திட்டனர்.

அதன்படி சமாதான முயற்சிகளில் அரசுத் தரப்பும் புலிகளுமே ஈடுபடுவர். ஆனால், அரசுத் தரப்பு சமாதான முயற்சிகளின் போக்குக் குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவருக்கு அவ்வப்போது தகவல் தரவேண்டும். இதுதான் அப்போது சந்திரிகா - ரணில் ஆகிய இருவராலும் ஒப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படை அம்சம்.

இப்போது ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கைமாறியுள்ளன. அன்று எதிர்க்கட்சிகளின் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இன்று அரசின் தலைவராகப் பிரதமர் பதவியில்; அன்று ஆளும் தரப்பின் தலைவியாக இருந்த ஜனாதிபதி குமாரதுங்க, இன்று எதிர்க்கட்சிகளின் தலைமைப் பொறுப்பில்.

பழைய ஒப்பந்த ஏற்பாடுகளை கனவான்தனத்துடன் தவறாது பின்பற்றுவேன் என்று ரணில் உறுதி கூறுகின்றார்; அதன்படி நடக்கின்றார்.

சமாதான முயற்சிகளின் போக்குக்குறித்து, எதிர்க்கட்சித் தரப்பின் தலைவரான ஜனாதிபதிக்கு விளக்கப்படுகின்றது. தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப்பேச்சின் பெறுபேறுகள், முன்னேற்றங்கள், தீர்மானங்கள் குறித்து இரண்டு நாள்களுக்கு முன்னரும் அப்பேச்சுக்களில் பங்குபற்றிய அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த அமைச்சர் மிலிந்த மொறகொட, ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கியிருக்கின்றார்.

'நான் ஆட்சியில் இருந்தால் ஒரு கதை, நீ ஆட்சியில் இருந்தால் வேறு கதை' என்ற மாதிரி இப்போது வேடம் போட முயல்கிறது பொ.ஐ.முன்னணி.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக - வழமைபோல - எதிர்க்கட்சித் தரப்பிலிருக்கும் சிங்களக் கட்சி, பேரினவாதப்போக்கை வெளிப்படுத்த முயல்கின்றது. இதனால் நாட்டுக்கும் பெரும்பான்மைச் சமூகத்துக்கும்தான் அதிக நஷ்டம் விளையும் என்பதை பொ.ஐ.மு. உணர்ந்துகொள்வது நல்லது.

# நுண்கலைப்பீட மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

யாழ்ப்பாணம்,நவ.17

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வகுப்புக்களைப் பகிஷ்கரித்துவரும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களாகிய எமது போராட்டத்துக்கு சாதகமான பதில் எதனையும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் இதுவரை வழங்காததையிட்டு மிகுந்த வேதனையும் அதிருப்தியும் அடைகின்றோம்.

- இவ்வாறு கடந்த 6ஆம் திகதிமுதல் தமது வகுப்புகளை பகிஷ்கரித்துவரும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

"யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களைப் பொறுத்தவரை, பரீட்சையில் தவறவிடப்படும் பாடங்கள் அடுத்த அரையாண்டை தொடர்ந்து கொண்டே, சித்தியடையாத பாடத்துக்குத் தோற்றி சித்திபெறக்கூடிய வாய்ப்பு உண்டு. அல்லது மீள் பரீட்சை நடைமுறைமூலம் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றன. ஆனால், எமது துறைக்கு மட்டும் பிரதான பாடத்திலோ அலலது துணைப் பாடத்திலோ ஒரு மாணவன் சித்தியடையாத பட்சத்தில் மீள்பரீட்சைக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

அத்துடன், ஏனைய துறைகளைப் போன்று அரையாண்டைத் தொடர்ந்துகொண்டு பரீட்சை எடுத்துக்கொடுக்கும் வாய்ப்பும் அளிக்கப்படாது ஒரு வருடத்தை வீணடிக்கும் நிலை காணப்படுகிறது.

அதுமட்டுமன்றி, ஒரு வருட காலத்துக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்ற தடைவிதிக்கப்படுகிறது. அடுத்துவரும் மாணவர் பிரிவுக்கு வேறு பாட அலகுகளே பாடவிதானமாகக் கொள்ளப்படும் நிலையில், விரிவுரைகளுக்குச் சமுகமளித்தும் சித்தியடையாதவர் எனக் கருதப்படும் ஒரு மாணவர் - ஒரு வருட காலம் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்காது - எவ்வாறு பரீட்சையை எதிர்நோக்கமுடியும்? என்றும் மாணவர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

தமது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் சாதகமான பதில் கிடைக்காதுவிடின், தொடர்ந்துவரும் நாள்களில் தமது போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக மாணவர்கள் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

(ஐ-9)

# பனை, தென்னை வள அபிவிருத்தியை முன்னெடுக்க பொதுவான அமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

வடக்கு - கிழக்கில் பனை, தென்னை வளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் பலன்களை விரிவுபடுத்தல், நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தப்பட்ட துறைசார்ந்தவர்களை இணைத்து பொதுவான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பனை, தென்னை வளம் சார்ந்த அதிகாரிகளுக்கான கலந்துரையாடலின்போதே இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அருள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், விவசாயபீட பீடாதிபதி சு.இராசதுரை, வடமாகாண பேரிணையத்தின் பொதுமுகாமையாளர் சிவனேசன், தமிழீழ நிர்வாகத்துறை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ். ப.நோ.கூ.சங்கத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் -

பனை அபிவிருத்திச் சபை, தென்னை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள், சமாசப் பிரதிநிதிகள், பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோரும் -

கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் பனை, தென்னை வளத்தினை மேலும் பெருக்கி அவற்றின் உச்சக்கட்டப் பயன்பாடுகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் நிறைவில் மேற்படி விடயங்களைச் செயற்படுத்துவதற்கென வடக்கு - கிழக்கை இணைத்து பொதுவான அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டது.

அந்த அமைப்பின் தலைவராக பேராசிரியர் மோகனதாஸும், செயலாளராக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் அருளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பிரதித் தலைவர்கள், இயக்குநர்கள், உறுப்பினர்கள் என சுமார் 17 பேரைக் கொண்ட இந்த அமைப்பில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பனை, தென்னை வளம் சார்ந்த வல்லுநர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதன் முதலாவது கூட்டத்தை அடுத்தமாதம் வவுனியாவில் நடத்துவது எனவும் -

அக்கூட்டத்தில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்தும் இதில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை நியமிப்பது தொடர்பாகவும் ஆராய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-4)

# தென்மராட்சி புனர்நிர்மாணம்; இலங்கை வங்கி பங்களிக்கும்!

## பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் தகவல்

சாவகச்சேரி,நவ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தவென திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளிலும், புனர்நிர்மாணப் பணிகளிலும் இலங்கைவங்கி முழு அளவில் பங்கேற்கும்.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் இலங்கைவங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம்.

சாவகச்சேரி இலங்கைவங்கிக் கிளையில் வெள்ளி விழா நிகழ்வு கடந்த திங்களன்று நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கி.தவயோகம் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வங்கியானது தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வின்போதுகூட தனது வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்தது. பருத்தித்துறை, மானிப்பாய், யாழ்ப்பாணம், அச்சுவேலி ஆகிய இடங்களில் தற்காலிகமாக இயங்கி தனது வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை வழங்கிவந்தது.

மீள்குடியமர்வை அடுத்து மீண்டும் தென்மராட்சியில் வங்கி நிலைகொண்டுள்ளது. இந்தநிலையில் வங்கியானது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கத் தயாராக உள்ளது. எனினும், வங்கி முழுமையாக இயங்குவதற்கு இங்கு போதிய வசதிகள் இல்லை.

குறிப்பாகத் தொலைபேசி, மின்சாரம் இல்லாத நிலையில் இயங்கவேண்டிய நிலை தென்மராட்சி வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளது. கணனி உட்பட பக்ஸ் மற்றும் சாதனங்கள் இந்த இலங்கை வங்கியின் கிளையில் இருக்கின்றன. ஆனால், அவற்றைப் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுகிறது.

ஆசியுரையை சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள், தென்னிந்திய திருச்சபை போதகர் ரீ.வசந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். வங்கி உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த விழாவில் கலந்துகொண்டனர். (ர-3)

### நாளை

கார்த்திகை 02
திங்கட்கிழமை
(18.11.2002)
திதி : சதுர்த்தசி
வைகறை 5.50 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 4.03 வரை.
கரிநாள்
சுபநேரம் : 12.08 – 1.38
ராகுகாலம்: 7.38 - 9.08
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.


எம்மைப்பற்றியும் சிந்தியுங்கள்!




'அடுத்த வருசமும் புலமைப் பரிசில் பரீட்சை வருதாம்'

அதனால அங்கால இங்கால அரக்காம அறைக்குள்ளேயே இருந்து படிக்கவேணுமெண்டு அம்மா கட்டாயம். அதோட ஆறு மணிவரைக்கும் ரியூசன் வைக்கவும் ஏற்பாடு!

ஆனால் எனக்கெண்டா.........

புத்தகச் சிறைக்குள் அகப்பட்ட ஒரு பட்டாம்பூச்சி.

"எமது மகிழ்ச்சியே எதிர்கால வளர்ச்சி"

விளம்பர அனுசரணை: - SC(UK)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2261 EXT 274. (தி-24918)

## தேவை

புடைவை (மொத்த) வியாபாரத்தில் அனுபவமும், ஆர்வமும் உடைய விற்பனைப் பிரதிநிதி தேவை. கமிஷன் அடிப்படையில் மேலதிக சம்பளம் வழங்கப்படும்.

விளம்பர இல. 1699,
(C/24891) C/O உதயன், யாழ்ப்பாணம்.



## Screen Printing

பரதன் மாஸ்ரர்

எல்லாப் பொருள்களிலும் 4வர்ணங்களில் ஸ்கிறீன் பிறின்ரிங் (குறிப்பாக CDகளில்) பயிற்சி நெறி

ஆரம்பம்: 22-11-2002

தொடர்பு:

**CAREER.COM INSTITUTE**

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அலுவலக நேரம்:
Mon., Wed., Fri. 10 - 2 மணி
Sat., Sun. 9 - 4 மணி. (10257)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது உபதபாலதிபர் குப்பிளான்
திருமதி தவேந்திரநாதன் வசந்தகுமாரி அவர்களின் பாசமிகு தந்தையார்

### வல்லிபுரம் செல்வநாயகம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10614) தமிழ்பேசும் உபதபால் அதிபர் தொழிற்சங்கம், யாழ்ப்பாணம் கிளை.

## அழியா நினைவின் அகவை நான்கில்



### செல்வி தேவசுதா (நிதியா) வடிவேற்கரசு

அன்னையின் கையில் 02.02.1987
ஆண்டவனின் அடியில் 01.02.1998

திதி : 17.11.2002

அவனிதனில் நான் வாழ ஆனதோ நான்காண்டு
அருமருந்தாம் என் தனிமகளாம் தேவசுதா (நிதியா) நீயின்றி
ஆனாலும் தீராது என் கவலை ஆயிரம் ஆண்டுகள்தான் சென்றாலும்
ஆறாத்துயரில் இங்கு நான் வெந்து நோவேன் நின்னிடத்தில் வரும்வரை.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உந்தன் ஆத்ம சாந்திக்காய் எப்பொழுதும் பிரார்த்தித்தபடியே உன் பிரிவால் வாடி நிற்கும்,

அம்மா - திருமதி செல்வராணி வடிவேற்கரசு.

"சித்தம்பாதி"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(10951)


கூரை அமைப்பில் புதிய அலை

## அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா
- 2.5 மி.மி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

அன்டன் சுபர் ஷெல்டா
சரியாகப் பொருத்துங்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனிஸ் றூவ்பிங் (பிறைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ஃபெக்ஸ்: 446554

Super Shelta
உங்களின் கூரைக்குப் பரிகாரம்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## கல்விக்காகக் கடலில் சங்கமித்த ஹாட்லி மைந்தர்களின்

# மூன்றாண்டு நினைவலைகள்



| சிவநாதன் ரவிசங்கர் | பாலகிருஷ்ணன் பிரதீபன் | பூரணமூர்த்தி கந்தர்வன் | சுந்தரலிங்கம் சிவோத்தமன் |
|---|---|---|---|
| அன்னை மடியில் 02.02.1981 | 17.04.1981 | 11.05.1981 | 23.03.1981 |

கடலின் அடியில்
17.11.1999

வாழ்வின்
விழா நாள்கள்
அவை!
உங்கள் குதூகலம்
எங்கள் கொண்டாட்டங்கள்!
உங்கள் துயிலெழுகை
எங்கள் சூரியோதயம்!

உங்கள் உலாவுகை
எங்களுக்குத் தென்றல்!
17.11.1999.....
பறிகொடுத்த பின்னரும்
இருக்கிறோம் தான்....
வெறிதாய்!

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(10668)

குடும்பத்தினர், நண்பர்கள்.

## சிறுவர் உரிமைகள் விடயத்தில்
# சர்வதேச விதிமுறைகளுக்கு புலிகள் மதிப்பளிக்கின்றனர்!
## ‘யுனிசெவ்’தலைமைத் தொடர்பாளர் பெருமிதம்

சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு மதிப்பளித்துச் செயற்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை; வரவேற்கத்தகவை.

- இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார் ஆயுத பிணக்குகளால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான யுனிசெவ் அமைப்பின் தலைமைத் தொடர்பாளா எம்.என்.நிஸார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யுனிசெவ் அமைப்பானது சிறுவர்கள் உரிமைகள் குறித்து பிரத்தியேக கவனம் செலுத்திவருகிறது. சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றை உறுதிசெய்வதுடன் ஆயுதப் பிணக்குகள் நிலவும் சூழலில அது தொடர்பாக சிறுவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் ஆயுதப் பிணக்குகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் போன்றவற்றில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளப்படுகிறது. சிறுவர்களின் உடல் - உள நலனை மேம்படுத்தும வகையில் சுகவாழ்வு நிலையம், உளநல நிலையம் போன்ற அமைப்புகளினூடாக யுனிசெவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இது தவிர, சமுதாயத்தில் நிலவும் சிறுவர் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளையும் யுனிசெவ் அணுகித் தீர்வுகாண முற்பட்டுவருகிறது.

இன்னும் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கு சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயுதப் பிணக்கில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் சிறுவர்கள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளைக் கடைப்பிக்கும்படி இறுககமான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தவேண்டாம் எனக் கேட்டிருக்கிறோம். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இந்த ஆண்டில் இதுவரை 200 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை தமது இயக்கத்திலிருந்து விலக்கி, அவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைத்திருக்கிறது. மேலும், தமது இயக்கத்தில் இணையமுன்வரும் சிறுவர்களையும் அவர்களது பெற்றோரிடம் கையளித்து வருகிறது. இது மிகவும் பாராடடத்தக்க செயலாகும். புலிகளின் இததகைய நடவடிக்கையானது அந்தச் சிறுவர்களின் எதிர்காலத்தைப் பொறுததவரை மிகப் பெரிய வரப்பிரசாதமாகும்.

விடுவிக்கப்படும் சிறுவர்களின் நலன்களைப் பேணுவதற்கு யுனிசெவ் நடவடிக்கை எடுத்துவருகிறது.

உள்ளூர் மட்டங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் சிறுவர்களை ஆயுதப் பிணக்குளில் இருந்து மேலும் பாதுகாக்கிறது. மனித உரிமைகள் ஆணைக் குழுவினருடன் இணைந்து சிறுவர் தொடாபான உரிமைகளைப் பேண மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

# பட்டப்பகலில் நகைகள் திருட்டு; கோப்பாய் பகுதியில் சம்பவம்!

பட்டப்பகலில் வீட்டில் இருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் சூறையாடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் பகுதியில் வசிக்கும் ம.இந்திராணி என்பவரின் வீட்டிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினம் காலை 9 மணியளவில் மேற்படி பெண் வீட்டின் பின்புறமாகவுள்ள கிணற்றடியில் சமையல் பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தார் என்றும் - பாத்திரங்கள் கழுவி முடிந்ததும் வீட்டிற்குள் நுழைந்த பெண்மணி பூட்டப்பட்டிருந்த அறைகள் அனைத்தும் திறககப்பட்டிருந்ததை அடுத்து நகைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்வையிட்டார் என்றும் -


அப்போது நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டகம் திறக்கப்பட்டு நகைகள் திருடப்பட்டது தெரியவந்தது என்றும் - கூறப்பட்டது.

கோப்பாய், அச்சுவேலி, ஆவரங்கால், கல்வியங்காடு போன்ற பகுதிகளில் இது போன்ற திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-180)

## கிறிஸ்தவ விவகார அமைச்சராக ஜோன் அமரதுங்க

கிறிஸ்தவ மத விவகார அமைச்சராக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னிலையில் நேற்றுமுன்தினம பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

உள்துறை அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக அவருக்கு கிறிஸ்தவ மத விவகார அமைச்சையும் வழங்குமாறு பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அண்மையில் ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்திருந்தார். (எ-4)



2001இல் வெளிவந்த இலக்கிய நூல்களுக்கான இலக்கிய விருது வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அந்த விழாவில் சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருதை கவிஞர் சோ.பத்மநாதனும், சிறந்த நாடக நூலுக்கான விருதை கந்தையா ஸ்ரீகணேசனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஐ)

# அரியாலைப் பாடசாலைகள் தனியார் கட்டடத்தில்

வலி.வடக்கு,நவ.17

அரியாலை பூம்புகார் தமிழ் கலவன் பாடசாலை, அரியாலை கிழக்கு தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றை நாளை திங்கட்கிழமை முதல் அரியாலை தபால் கட்டைச் சந்திக்கு அண்மையாக, கண்டி வீதியிலுள்ள தனியார் இல்லத்தில் இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யுத்த சூழ்நிலைகளை அடுத்து கடந்த ஏழு வருடங்களாக இந்த இரு பாடசாலைகளும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-86)

# வழிபாட்டு மரபுகள் கூறும் அருளொளிக் கீர்த்தனைகள்

நூல் : “அருளொளிக் கீர்த்தனைகள்”
ஆக்கம் : அளவையூர் அருட்கவி, கலாநிதி கவியோகி சீ.விநாசித்தம்பிப் புலவர்
வெளியீடு : ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், நாகேஸ்வரம் - அளவெட்டி.



**கவிமணி**
**இராசையா ஸ்ரீதரன்**

அளவையூர் அருட்கவியின் கவித்துவம் உண்மையிலேயே பெயருக்கேற்ப அருளொளி வீசுவதை இந்த நூலில் பரக்கக்காணலாம். ஐயாவின் உள்ளத்திலிருந்து எழும் ஆத்மார்த்தமான ஆழ்ந்த கருத்துக்கள் தெய்வாம்சம் மிக்க கீர்த்தனைகளாக உருவெடுத்திருப்பது நமக்குக் கிடைத்துள்ள ஓர் அரும் பொக்கிஷமாகும்.

### அருட்பாடல்கள்

இந்த நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விதத்தில் அருளொளி வீசி நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. பாடல்கள் யாவும் உள்ளந்தோறும் உவகையளிக்கும் வகையில் இனிமை பயக்கும் வடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இனிக்கும் தமிழ் இசை வடிவில் ஐயாவின் பேனாமுனைமூலம் பக்திரசம் ததும்பும் தீந்தமிழாக இன்னிசை யாய், இசைப்பயனாய், வரிகள் தோறும பரிணமித்திருக்கின்றது என்று கூறினால் அதுமிகையாகாது; ஈடு இணை கிடையாது.

### பக்திரசப்பனுவல்

புத்தகத்தைக் கையில் எடுக்கும் போதே அருளமுதம் உண்டதுபோல உள்ளம் இனிக்கின்றது. பரங்கருணைத் நடங்கலாக விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான நடராஜமூர்த்த திருவுருவத்தைத் தாங்கிய மூவர்ண அட்டையுடன் பக்தி மணங் கமழும் இன்பப்பரவசத்தைத் தூண்டுகின்ற அருளொளிக் கீர்த்தனைகள் நல்லை ஆதீன கலாமண்டபத்தில் வெளியானது அருட்பிரவாகத்தைத் தூண்டும் செயலாகும். செயற்கரிய பணியாக விளங்குகின்ற திருப்பணியாக இதை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

### உள்ளப்பாங்கு

வாழ்ந்த வாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த பெருந் தலைவனாக விளங்குகின்ற சிவன், ஐந்தொழில்களையும் ஆன்மாக்களுக்காக அருளிச்செய்யுமாப் போல், ஐயா அவர்களின் உள்ளப் பாங்கு அவரது கைவண்ணத்தில் வெளிவந்திருக்கும் இந்த அருளொளிக் கீர்த்தனைகள் மக்கள் மத்தியில் ராகம், தாளம், பாவம், பக்தி, லயம் என்ற ஐந்தையும் அழகுற உணர்த்தி நிற்கின்றன எனில் சாலப் பொருந்தும்.

### தூய்மையான நூல்

எவரும் எளிதில் படித்து இன்புறக் கூடியவகையில் அழகிய எழுத்துக்களில் அச்சாகியிருக்கும் இந்நூல், நல்ல தூய வெண்மையான தாளிலும் அச்சிடப்பட்டிருப்பதால் மனத்தூய்மைக்கும் வித்தாகியிருப்பதைக் குறித்து நிற்கின்றது. பக்திக்கு அடையாளம் தூய்மை என்பதையும் பறைசாற்றிநிற்கின்றது.

அத்துடன், மலேசியா வாசுதேவனின் குரலில் கம்பீரமாக ஒலிக்கும் கீர்த்தனைகள் காதுகளில் தேனாக இனித்து தேனருவியாக ஊற்றெடுத்துப் பாய்கின்றன. இதன் இனிமையை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. அத்தனையும் கற்கண்டும் கரும்புச் சாறும் கலந்த தேன்துளிகள். அருந்தியவர்களுக்குத் தான் அருமைபுரியும்.

பைந்தமிழ்ச் சோலையில் பரவசமாக வரும் தமிழ்த் தென்றல் தெய்வமணம் கமழ வீசுவதுபோல பக்கம் பக்கமாகப் புரட்டும்போது பக்தி மேவிடுகின்றது. ஒவ்வொரு சைவருது வீட்டிலும் இருக்கவேண்டிய அருமையான நூலான அருளொளிக் கீர்த்தனைகள் சைவசமயக் கோட்பாடுகளையும் உண்மைகளையும் ஆங்காங்கே உணர்த்திநிற்பது இதன் சிறப்பம்சமாகும். இந்த நூலில் 271 கீர்த்தனைகள் உள்ளன. கவியோகியின் கவித்துவம் அத்தனை பாடல்களிலும அருளொளி வீசி நிற்பதனால் இந்துப் புத்தகத்துக்கு இடப்பட்டிருக்கும் பெயா மிகப் பொருத்தமானதே. ஆசிரியரின் இசைப் புலமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கும் இந்த நூல், சைவ மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு சங்கீத பூஷணங்கள்மூலம் ரசிக்கத்தக்கவகையில் ஒலியாக எழும் போது ஜனரஞ்சகமாக இருக்கும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை.

ஸ்ரீ விநாயகர், பரமசிவன், அம்பிகை, நாராயணர், முருகன் ஆகிய பஞ்சமூர்த்திகளுக்குமான பாடல்களைக்கொண்டு விளங்கும் இந்தப் புத்தகத்தைத் திறந்தவுடனே அருட்கவி அவர்களின் திருநீறு துலங்கும் தெய்வத் திருக்கோலம் காண்போர் உள்ளங்களில் வணங்கும் சித்தத்தைத் தருகிறது. ஒவ்வொருபாடலும் உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்துள்ளதால் அத்தனையும் தத்துவ முத்துக்களாக அருளொளி வீசுவதில் ஐயமேது?. ★

## அடுத்த ஆண்டில்
# 193 நாள்கள் மட்டுமே பாடசாலைகள் இயங்கும்

2003ஆம் ஆண்டு இடம்பெறும் அரசாங்க விடுமுறை தினங்களைக் கருத்திற்கொண்டு, அவ்வருடத்தில் 193 நாள்கள் மட்டுமே பாடசாலைகளை நடத்தக்கூடியதாக உள்ளதென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அடுத்த வருடத்திற்கான தவணை அட்டவணைக் குறிப்பொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு பாடசாலைத் தவணைகள் பின்வருமாறு அமையவுள்ளன.

தமிழ், சிங்கள பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 10ஆம் திகதி வரையும் -

மே மாதம் 19ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிவரை இரண்டாம் தவணைக்காகவும் -

ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரை மூன்றாம் தவணைக்காகவும்- திறக்கப்பட்டிருக்கும்.

முஸ்லீம் பாடசாலைகள் ஜனவரி மாதம் 01ஆம் திகதிமுதல் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதிவரை முதலாம் தவணைக்காகவும் -

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிவரை இரண்டாம் தவணைக்காகவும் -

ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதிவரை மூன்றாம் தவணைக்காகவும் திறக்கப்படவுள்ளன.. (எ-152)

## வல்வை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை நடத்திய
# முல்லைத்தீவு மருத்துவ முகாமில் சுமார் 700 பேருக்கு சிகிச்சை

வடமராட்சி,நவ.17

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் அனுசரணையுடன் வன்னிப்பிரதேச மக்களுக்கென இலவச மருத்துவ பரிசோதனைமுகாம் ஒன்றை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடத்தியது.

இம் முகாமில் 425 பேருக்கு கண பரிசேதனையும், 160 பேருக்கு இரத்த அழுத்தப் பரிசோதனையும், 100 பேருக்கு நீரிழிவு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

கண்பரிசோதனை செய்யப்பட்ட 425 பேரில் 306 பேருக்கு இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. ஏனைய 119 பேரையும் கண்சத்திர சிகிச்சை செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இம்மருத்துவ பரிசோதனை முகாமில் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியப் பொறுப்பதிகாரியும், அபிவிருத்திச் சபைத் தலைவருமான டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மற்றும் அங்கீகாரம் பெற்ற கண பரிசோதனையாளர்களும் கலந்துகொண்டு பரிசோதனைகளை நடத்தினார்கள்.

பரிசோதனைக்குப் பின்னர் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் என்.இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இலவசக்கண்ணாடி வழங்கும் வைபவத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கடற்புலிகளின் முல்லைத்தீவுப் பொறுப்பாளர் வினோத், மருத்துவப்பிரிவைச் சேர்ந்த விடுதலை, கடற்புலிப் படைப்பிரிவைச சேர்ந்த மங்களேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணவில்லை

புதிய லுமாலா 56C85610 இலக்கமுடைய சைக்கிள் 03.11.2002 அன்று கஸ்தூரியார் வீதியில் ஆஸ்பத்திரி வீதிக்கும் மணிக்கூட்டு வீதிக்குமிடையில் (நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது) காணவில்லை. இதுபற்றிய தகவல் தெரிந்தவர்கள் இல.74/1, கஸ்தூரியார் வீதி, நியூ சோபிதா நகைமாடத்தில் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். (10673)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NEC VERSA, Windows 98, லப்டொப் கொம்பியூட்டர், C.D ROM, Floppy disk drive and battery உடன் விற்பனைக்கு. தொடர்பு:-171, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10617)

கோப்பாய் சந்திக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய 2பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- S.தயாபரன், கிராம அலுவலர், கோப்பாய் தெற்கு. (10469)

7 மாதங்கள் நிரம்பிய அல்சேன் பெண் நாயும் 16 மாதங்கள் நிரம்பிய கறுப்பு நரை பொம்மேரியன் ஆண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு பலாலி றோட் சந்திப் பிள்ளையார் கோயில் அருகில். (10638)

வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10639)

கலர் மீன்கள், பல இனக் குருவிகள், மீன்தொட்டிகள், அதற்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (10511)

SONY 2197, 2135 T.Vக்களும் FIAT - 1100 ரக 3 ஸ்ரீ ஐத் தொடர் இலக்கமாகக் கொண்ட காரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.S.மகேஸ்வரன் (பாஸ்கரன் பூங்கா முன்பாக), கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.(10520)

மிக நல்ல நிலையிலுள்ள ஹொண்டா சுட்டர்சுப் டிலுாக்ஸ் 90 மற்றும் யமஹா மேற்-80 மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (10676)

டோமன் பிஞ்சர் நாய்க்குட்டிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6 நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண பாடசாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (தொடர்பு: நேரம்: காலை 11-12.30 வரை மாலை 4.00 - 6.00 வரை) (10688)

6சிறி 8000 தொடரிலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிறிஜ் பாினா மொடல் (Flour Bord கியர்) கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிறி ஜெயந்தி ஜுவல்லறி, '74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P 22-2074 (10678)

சகல ஆவணங்களுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள Yamaha Mad 90(12) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.யேசுதாசன், இல.03, கோயில் வீதி (ஆச்சிரமம் முன் ஒழுங்கை), யாழ்ப்பாணம். (10674)

லான்சர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்லையா தர்மலிங்கம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. தொலைபேசி 0702·12758. (10562)

## கடை தேவை

யாழ்நகர் ஸ்ரான்லி வீதியில் ஒருகடை தேவை. வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ இருப்பின் தொடர்புகொள்ளவும். கேதீஸ். T.P. 222 2901. (10548)

## உடன் விற்பனைக்கு

பருத்தித்துறை வியாபரி மூலையில் சகல வசதிகளுமுள்ள இடத்தில் அமைந்துள்ள 4 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.யோகராசா, கந்தசாமி கோயிலடி, நீர்வேலி. (10658)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள News Mat Yamaha -50, Honda Charly (மோட்டார் சைக்கிள்கள், பெண்களுக்கான புதிய லுமாலா துவிச்சக்கரவண்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வா, 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2429, 3252(10496)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19 முருகேசர், ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10640)

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 100/, சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி 1Kg 180/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு இல.85, செம்மணி வீதி, நல்லூர் (கல்விக்கந்தோருக்கு அருகில்). (10648)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 100/, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 180/- வேண்டிய நிறைகளில் பெற்றுக கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன் பாக), கட்டப்பிராய். (10646)

## ஓட்டோ விற்பனைக்கு

ஒருவரின் பாவனையிலிருந்த 202 ஐ தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.15, முதலாம் ஒழுங்கை, பிறவுண வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (10658)

## மணமகள் தேவை

1969 மார்கழியில் பிறந்த உத்தராட நட்சத்திர லணடன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு 1976 ஜனவரிக குப் பின் பிறந்த 5' 5" உயரமுடைய பட்டதாரி அல்லது அதற்குச்சமமான மணமகள் தேவை. தொடர்பு: இல.12, கில்டன் பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

தொலைபேசி 01-594993 (10491)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் P.R.உடைய 1970இல் பிறந்த, திருவாதிரை நட்சத்திரமுடைய, பாவம் குறைந்த மணமகனுக்கு யாழ்அல்லது லண்டனில் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1697, C/o உதயன், யாழ்ப்பாணம். (10985)

லண்டனில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 இல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம், 1இல் செவ்வாய், சூரியன், 72பாவம் உடைய மொறட்டுவ பல்கலைக்கழகப் பட்டதாரி மணமகனுக்கு படித்த பண்பான, பொருத்தமான மணமகள் தேவை. சகல விவரத்துடன் தொடர்பு: கொள்ளவும். C/o விளம்பர இல.1696, உதயன். (10986)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971.06.03ஆம் திகதி பிறந்த அத்த நட்சத்திரம், 2ஆம் பாதம், கிரகபாவம் குறைந்த லண்டனில் M.B.A. முடித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (லண்டன் P.R விரும்பத்தக்கது) விளம்பர இலக்கம் 1695 C/o உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (10480)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூசம் 4, 1965இல் பிறந்த, செவ்வாய் குற்றமற்ற, கிரகபாவம் 55, மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (10607)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், ஒரே மகள், மிகச் சிறந்த சீதனம், அழகானவர் உள்நாட்டு உத்தியோக மணமகன் தேவை. மாத்துச் சம்பந்தத்திற்கு நல்ல நிலையிலுள்ள இங்கிலாந்து பிரஜை சகோதரன் உண்டு. வயதுகள் 33இற்கும் 43இற்கும் இடையில் விரும்பத்தக்கது. விவரத்துடன் தொடர்பு: விளம்பர இல. 1701, C/o உதயன். (10652)

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணம், 43, கண்டிவீதியில் அமைந்துள்ள APAT தங்குமிட விடுதிக்கு பணியாளர் (Room Boy) தேவை. உடன் தொடர்புகொள்ளவும். கிராம சேவையாளரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமுகந்தரவும். சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு:
**APAT தங்குமிட விடுதி,**
**43, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** (10647)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சிறுதொகைப் பணத்துடன் பெண்கள் பாவிக்கும் கைப்பை ஒன்று படத்துடன் தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அப்படத்தில் உள்ளவர் நேரடியாக வந்து, தகுந்த ஆதாரம் காட்டி மேற்படி சங்கத்தில் பெற்றுக்கொள்ளவும். அத்துடன் வீட்டுப் பாவனைப் பொருள்களும் உடுப்புகளும் உண்டு. (சி-24892)

## நாடகம்

நேற்று வானொலியில் பொறாமை நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50/- 3.எங்கள் நாடு ரூபா 75/- (10683)

## தவறிவிட்டது

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த நல்லதம்பி சுப்பிரமணியம் (புஷ்பபவளம்) என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.190580113V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவன்கோயிலடி, வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (10677)

## தங்குமிடவசதிகள்

கொழும்பில் அமைதியான சூழலில் தளபாடத்துடன் தனி வீடுகள், அறைகள் நாள் மாத வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல.51 E.S. பெனான்டோ மாவத்தை, வெள்வத்தை, கொழும்பு - 06 T.P 021-2472 074 510880. (10660)

## தென்மராட்சி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்புகளில் கல்வி கற்பித்து வரும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை வரணி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

நாளை ஆரம்பமாகும் இந்த செயலமர்வு தொடர்ந்து 19ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் -

2003ஆம் கல்வியாண்டில் தரம் 5 வகுப்பில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என்றும்- வலயக்கல்வி பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)

## நெடுந்தீவில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் கடந்த மாதம் நெடுந்தீவில் நடத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை முகாமில் கண் சிகிச்சை பெற்றவர்களுக்கு இரண்டாவது கட்டமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மருத்துவப் பிரிவின் கண் சிகிச்சைப் பிரிவினால் சிபாரிசு செய்யப்பட்ட 60 பேரில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கண்ணாடி வழங்கும் வைபத்தில் கண்ணாடிகளைப் பெறத் தவறியவர்களுக்கே இரண்டாவது கட்டமாக எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுடைய பெயர் விவரங்களை விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியல்துறை பணிமனையில் பார்வையிடலாம் எனவும் -

அன்றைய தினம் தவறாது கலந்துகொண்டு கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் -

விடுதலைப் புலிகளின் தியாக தீபம் திலீபன் மருத்துவ சிகிச்சைப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-ரி)

---

**ஆன்மீக நூல்கள் பரிசு வைபவங்களுக்கும் நூல்நிலையங்களுக்கும் குறைந்த விலையில் வழங்கல்**

ஆத்மஜோதி வெளியீடுகள் புதிய பதிப்புகள் கனடாவில் இருந்து எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. தேவையானோர் தொடர்புகொள்ளவும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு மணிமுதல் 4 மணிவரை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் பார்வையிடலாம். (10679)

---

# ரஷ்யாவில் உயர்கல்வி

## மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

- ★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
- ★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்
  முதலாம் வருடம் - 3200 U.S.D.
  இரண்டாம் வருடத்திலிருந்து 2800 U.S.D.

(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)

அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: **Uthayajothy**
(Final Year Student in the University)
T.P.: Local 0777-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com

(C/24913)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 - 12 - 1920

இறப்பு 18 - 10 - 2002



## அமரர் சின்னத்தம்பி இராசசிங்கம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)

திதி: 17.11.2002

நீர்வேலியில் பிறந்தாயே! பொலீஸாராய்த் திகழ்ந்தாயே!
வவுனியாவில் வாழ்கையிலே வாழ்வதனைத் துறந்தாயே!
குடும்பத்து ஒளி விளக்கே! குலத்தின் மணி விளக்கே!
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

நிரந்தர முகவரி: மாசிவன், நீர்வேலி.

தற்போதையமுகவரி: 22, திருநகர் வீதி, வவுனியா.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

(10687)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறைகொண்டு உதவிவருபவரான அயற் பாடசாலை ஆசிரியை **கௌரி கணேசலிங்கத்தின்** அன்புக் கணவர்

## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/வண்.நாவலர் ம.வி., யாழ்ப்பாணம்.

(10675)

---

# மரண அறிவித்தல்

## லோகநாதன் நிசாந்தன்

(சாந்தன்)

மானிப்பாய் மூத்ததம்பி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் நிசாந்தன் 15-11-2002 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் லோகநாதன் - சிவஞானாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மகனும் ரம்மியா (ஜேர்மனி), நிருஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16.11.2002) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்ததம்பி வீதி, மானிப்பாய்.

(10682)

தகவல்:
சி.மகேந்திரநாதன்
(சிந்தா - சித்தப்பா)

கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில்

# பாடசாலைகள் அனைத்திலும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

## தேவை என்கிறார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

அச்சுவேலி,நவ.17

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலையினை மாற்றி, கல்வித்தரத்தினை மேம்படுத்த வசதியாக பாடசாலை மட்டத்திலான வழிகாட்டல் ஆலோசனைச் சேவை உரியமுறையில் நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன்.

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலத்துக்குக் காலம் கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் முன்மொழிவுகளில் பாடசாலை மட்டத்திலான வழிகாட்டல் ஆலோசனைச் சேவைபற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் "சேவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது கல்வி அபிவிருத்தியில் சில திருப்பங்களை ஏற்படுத்தி மாணவர்களை வழிப்படுத்தும்.

சமகால மாணவர்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு தீர்வு காணப்படவேண்டும். மாணவர்களின் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான வழிகாட்டல் ஆலோசனை இல்லாத நிலையில், அவர்கள் வகுப்பறைக் கல்விச் செயற்பாடுகளில் அக்கறை கொள்ளமுடியாது.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு சமகாலத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அவர்களின் கல்வி அடைவு மட்டத்தை பாதிப்படையச் செய்துள்ளன. பரீட்சைப் பெறுபேறுகளில் அதனைக் கண்டு கொள்ளமுடிகின்றது.

பொருத்தமான முறையில் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நடைமுறைப் படுத்துவதன்மூலம், கல்வி அடைவு மட்டத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினைப் போக்கி கல்வித்தரத்தினை மேம்படுத்தமுடியும் - என்றா அவர் தெரிவித்தார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராசா தனதுரையில்:-

ஆசிரியர்கள் தொழிற் தகைமை விருத்தியில் வழிகாட்டல் ஆலோசனை தொடர்பான நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். அதனூடாக மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை வழங்கி மாணவர்களை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ வழிப்படுத்தவேண்டும்.

பல்வேறு அழுத்தங்களுடன் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அவை தீர்த்துவைக்கப்பட வேண்டும். பொருத்தமான ஆற்றுப்படுத்தல் மூலம் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் - என்றார். (எ-11)

# அமைச்சர் ஹக்கீம் தலைமையில் 8 எம்.பிக்கள் பிரதமருடன் சந்திப்பு

முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் ஹக்கீம் தலைமையில் கடந்த வியாழனன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்பாக பிரதமர் வழங்கிய உறுதிமொழி பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், தனது உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் அவர்களிடம் உறுதியளித்தார்.

அமைச்சர் ஹக்கீம் தலைமையில் நிசாட்பதியுதீன், ஏ.எல்.எம். தௌபர், எம்.எஸ்.தௌபீக், ஏ.எம். தௌபீக், பஷீர் சேகுதாவுத், எச்.எம். எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எனினும் நூர்தீன் மசூர், ஏ.எல்.எம் அதாவுல்லா, மௌலானா அப்துல் காதர், எம்.பி.அஸிஸ் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. (எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.பிரதேச செயலர் பிரிவின் கீழ் முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களாக கடல்வளத் தொழில் நுட்பப் பயிற்சிநெறிகளுக்கான மீள் பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# உடுவில் கல்விக்கோட்ட சைவத் திருமுறை விழா

வலிகாமம்,நவ.17

உடுவில் கல்விக் கோட்டத்தினரால் நடத்தப்படும் வருடாந்த சைவத் திருமுறை விழாவும், பரிசளிப்பு வைபவமும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இந்த விழா இடம்பெறும்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து திருமுறைச் சுவடிகள், சமயகுரவர்கள், ஆறுமுகநாவலர் ஆகியோரின் திருவுருவப்படங்கள் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வை.சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்ப்பிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் சிவ. மகாலிங்கம், ஆசிரியர் ஆறு.திருமுருகன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

யாழ்பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா, திருமுறை விழாச் சிறப்பு மலரை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துவார்.

நீதிச் செய்யுள் மனனம், திருமுறைப் பண்ணிசை, புராணபடனம், கதாப்பிரசங்கம், தொண்டுப்பெயர் செயன்முறை என்பவற்றில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகள் இவ்விழாவில் வைத்து வழங்கப்படும். (எ-152)

## பணிப்புலத்தில் 48 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்னர் இது வரை 48 குடும்பங்கள் பணிப்புலம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளன.

மேற்படி குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகப் பணிப்புலம் கிராம அலுவலர் எஸ். ஜீவராசா தெரிவித்தார். (எ-135)

# செபம் வாழ்வின் மையம்

செபம் என்றவுடன் எம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் முதற்கண் தோன்றுவது என்னவெனின்; எம் தேவைகள் எல்லாவற்றையும் தந்தையாகிய இறைவனிடம் ஒன்றன்பின் ஒன்றாக மூச்சு விடாமல் கொட்டிவிடுவது. ஆனால், அதற்கு அதுதான் ஓர் அர்த்தம் மட்டும் என்று அல்ல. செபம் செய்தல் அல்லது செபித்தல் என்பதற்குப் பல விளக்கங்கள் உள்ளன.

செபித்தல் இறைவனோடு பேசுவதென்றும், இறைவன்பால் எம்மனங்களை எழுப்புவது என்றும், இறைவனிடம் எமக்குத் தேவையானவற்றைக் கேட்பது என்றும், இறைவனைப் புகழ்வது என்றும், இறைவனிடம் மன்னிப்புக் கேட்பது என்றும், இறைவனோடு ஒன்றிப்பதென்றும் பலவித

**ஞாயிறு நற்பிரசாதம்**

விளக்கங்களைக் கூறலாம். இவை எல்லாம் செபம்தான். ஆனால், இதை இறைவன் மட்டிலும் அயலார் மட்டிலும் நாம் ஏற்படுத்திக்கொள்ளும் உறவின் மனநிலையெனக் கூறுவது சிறந்தது.

செபம் என்னையும் இறைவனையும் இணைக்கின்றது. அதேவேளை யில் என்னையும் அயலவரையும் இணைக்கின்றது. என்னையும் இறைவனையும் இணைத்து அயலவரைப் புறந்தள்ளுமாயின் அது உண்மையான செபம் அன்று. இறைவனோடும், அயலவரோடும் ஒன்றிக்கின்றபோது தான் செபத்தின் தன்மை வெளிப்படுகின்றது. செபம் வானகத் தந்தையையே நோக்கியதாக இருக்கவேண்டும். அவ்வாறு செபிக்கின்றபோது, அது விசுவாசம், நம்பிக்கை, அன்பு போன்ற பண்புகளோடு தாழ்ச்சி நிறைந்ததாகவும் அது அமைய வேண்டும்.

நீ செபிக்கும்போது மறைவாய் உள்ள உன் தந்தையை நோக்கிச் செபம் செய். நீ கேட்கும் முன்னே உனக்குத் தேவையானது இன்னதென்று உன் தந்தைக்குத் தெரியும். நாம் செபிக்கும்போது, தந்தையே இப்படிச் செய்யும், அப்படிச் செய்யும் என்று இறைவனுக்கு புத்தி சொல்லிக் கொடுக்கும் செயலை செபிக்கும்போது தவிர்த்துக்கொள்ள வேண்டும். தந்தையாகிய இறைவனின் விருப்பம் என்னில் செயற்பட என்னை நான் தயாராக வைத்திருக்கச் செபம் உதவவேண்டும்.

அயலவருக்குத் துன்பம் வர வேண்டும், அவர்கள் மேல் சாபம் விழவேண்டும், அவர்களுடைய துன்பத்தில் நான் இன்பம் காணவேண்டும் என்று செபிப்பது மகா தவறாகும். நாம் ஒவ்வொருவரும் கேட்கின்ற வரங்கள் எல்லாம் எம் தந்தையாம் இறைவனால் அருளப்படுவதில்லை. அவற்றுள் சில இறைவனுடைய மகிமைக்காகவே நிகழ்கின்றன.

நாம் விசுவாசம் இன்றி செபிக்கின்றோம். அதுதான் பயன் கிடைப்பதில்லை. விசுவாசத்தோடு கேட்டால், அயலவரின் துன்பத்துக்காக கெட்ட மனநிலையுடன் செபிக்கின்றோம். இந்த வேளைகளில் எமது செபம் கேட்கப்படமாட்டாது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று என்னையும் இறைவனையும், அயலவரையும் இணைக்கும் போதுதான் உண்மைச் செபம் வலுவை அடைகின்றது. நல்ல செபத்தினூடே எனது வாழ்வு தங்கியிருக்கின்றது. இதை அறிகின்ற இறைவன் எனது வாழ்வை வளம்படுத்துவார்.

'நான் செபிக்கும்போது வானகத் தந்தையின் திருவுளம் நிறைவேற வேண்டும் என்று செபிப்பேன். அயலவருக்கு நன்மை விரும்பியே செபிப்பேன்.'

அருட்சகோதரர்
செபமாலைப்பெரேரா (அ.ம.தி.)

# மக்கள் முகம்



திருநெல்வேலி கிழக்கு, வெள்ளைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி பத்மராஜா அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர், வாலைம்மன் சனசமூக நிலையத்தின் தலைவராகவும், இந்துமா மன்றத்தின் நிர்வாக செயலாளராகவும், இலங்கைச் சாரணர் சங்க உறுப்பினராகவும், நல்லூர் திரிசாரணர் குழுத் தலைவராகவும், வெள்ளைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை பொருளாளராகவும், செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையின் உபசெயலாளராகவும் பல்வேறு பதவிகளை வகித்து வருகின்றார்.

செங்குந்த இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினரான இவர் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை, செங்குந்த இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார். (எ)

★ ★ ★



கரம்பொன், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி ஜேம்ஸ் செல்வராணி தம்பதிகளின் புதல்வன் ஜேம்ஸ் பிரான்ஸிஸ் சேவியர் அண்மையில் ஊர்காவற்றுறை, மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் புங்குடுதீவு கிழக்கு கிராம அலுவலராகக் கடமைபுரிகின்றார். (எ)

★ ★ ★



கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த எஸ்.ஏ.தேவச்சந்திரன் நீதியமைச்சினால் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு, யாழ்.மேலதிக நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வர்த்தக ஆசிரியராகப் பணியாற்றும் இவர், அகில இலங்கை வர்த்தகப் பட்டதாரிகள் ஆசிரிய சங்கச் செயலாளராகவும், தென்மாகாண வணிக மாணவர் மன்ற ஆலோசகராகவும், வடமராட்சி வணிக மாணவர் சங்கத் தலைவராகவும் இலங்கை வணிக மாணவர் நலன்புரிச்சங்கச் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். (எ-173)

★ ★ ★



மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தரும், நீண்டகால சேவைக்கான தங்கப் பதக்க விருது பெற்றவருமான ம.சுப்பையா அவர்கள் அண்மையில் மாவட்ட நீதிபதி திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் யாழ்.மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளராகவும், சிறந்த விளையாட்டு வீரராகவும் காஸ்ய நாடக நடிகராகவும் விளங்கும் இவர் கிராம மட்டத்தில் எழும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் ஈடுபட்டுவருகிறார்.

தென்மராட்சி ப.நோ.கூ.சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், வேரப்கேணி ப.நோ.கூ.சங்கக் கிளைக் குழுத்தலைவராகவும், வளர்மதி ச.சநிலையத்தின் உபதலைவராகவும் பணியாற்றிவரும் இவர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பழைய மாணவனும் ஆவார். (எ)

★ ★ ★



முருகேசு பாலசிங்கம் சமாதான நீதிவானாக 14.11.2002 அன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திருமதி ஜே.மடவல முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். குயிக் எண்ட பிறை சேர்ஸ், யாழ்ப்பாணம் மக்ரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியவற்றின் உரிமையாளரான இவர் சாவகச்சேரி 306 பி அரிமாக்கழக தவிசாளரும், புகையிரதப் பகுதியின் இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தரும் ஆவார்.

இவர் வெள்ளவத்தை வைஸ்மன் கழக முன்னாள் அங்கத்தவரும், வை.எம்.சி.ஏயின் ஆயுள் அங்கத்தவரும், சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் ஆவார். (எ)

★ ★ ★



குருநகர், ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான கஸ்பார் பிரான்சிஸ் வவுனியா மாவட்ட நீதி நிர்வாகத்துக்கான சமாதான நீதிவானாக மாவட்ட பதில் நீதிவான் எஸ்.சிற்றம்பலம் முன்னிலையில் அண்மையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் யாழ். கன்னியர் மடம் ம.வி., யாழ்.புனித மரியாள் றோ.க.பாடசாலை, யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலம் ஆகியவற்றின் பழைய மாணவனும், சிறந்த நாடக நடிகரும் ஆவார். (எ-51)

★ ★ ★



கரவெட்டி, கரணவாய் மேற்கைச் சேர்ந்த பொன்னம்பலம் குகதாஸ் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். வடமராட்சி தொழில்சார் பண்பாட்டுப் பேரவை நிர்வாக உறுப்பினரான இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் முன்னாள் உப செயலாளராகக் கடமைபுரிந்தவர். (எ-173)

★ ★ ★



யாழ்ப்பாணம், உடுவில் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா கடந்த 34 வருடங்களாக ஆசிரியப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார்.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் தமது சேவைக்காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கும் கிராம மக்களுக்கும் அரும்பணியாற்றியுள்ளார்.

இவர் பத்திரிகையாளராகவும் கடமை ஆற்றி வருகின்றார். (எ-152)

★ ★ ★

## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் நினைவு தினத்தையொட்டிய ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தாங்களே விண்ணப் பத்தைத் தயாரித்து தங்கள் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுற வுச் சங்கம் அல்லது பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கம் அல்லது சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் அல்லது பொதுமுகாமையாளரின் சிபாரிசுடன் 30.11.2002 ஆம் திகதிக்கு முன்னதாக *"மாவட்டச் செயலாளர், யாழ்ப்பா ணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் கட்டடத் தொகுதியின் 2ஆம் மாடி, யாழ்ப்பாணம்"* என்னும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்.

★ போட்டி 04.12.2002 அன்று காலை 7.00 மணிக்கு (*புதியநேரம்*) மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகும்.

★ போட்டியாளர்கள் குறித்த இடத்திற்கு புதியநேரம் 6.30 மணிக்கு சமுகமளிக்கவேண்டும். (தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்பட மாட்டாது)

★ போட்டியில் பங்குபற்றும் ஆண்களுக்கான வயதெல்லை இல்லை.

★ போட்டியில் பயன்படுத்தும் சைக்கிள்களின் 'மக்காட்டு'க்கள் அகற்றப்படக்கூடாது.

- மாவட்டச் செயலாளர்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.
தொலைபேசி: 222 2324 (C/24915)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 21 - 07 - 1921

மறைவு 17 - 08 - 2002

அமரர்

### டாக்டர் தம்பு இராசையா

*வைத்திய கலாநிதியாய் மக்களின் சேவைதனை*
*வையகம்மீது ஆற்றி மனமது குளிரச் செய்தீர்*
*நித்தமும் அன்புகாட்டி நிலமிசை நிமிர்ந்து*
*நின்ற உத்தமச் சீரேநீர் எங்கு சென்றீர்?*

*'ஸ்ரீரங்கம்',*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

- உறவினர்கள், நண்பர்கள்.

(10693)

## மாவீரர் தின பதாகைகள்

தென்மராட்சி,நவ.17

மாவீரர் நாளையொட்டிய தொங்கு பதாகைகள் தென்மராட்சி பிரதேசத் தின் பல இடங்களில் காணப்படுகின் றன.

பிரதேசத்தின் பொது அமைப்புக் கள் இந்த தொங்கு பதாகைகளை வீதிகளில் கட்டியுள்ளன.(எ-117)

## பொலீஸாருக்கு வாகன உதவி வழங்கும் பொதுமக்கள்

தென்மராட்சி,நவ.17

சாவகச்சேரி பொலீஸாருக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்படா ததை அடுத்து பொலீஸ்நிலையத் தில் முறைப்பாடு செய்யச்செல்வோர் விசாரணைகளின் நிமித்தம் பொலீஸா ருக்கு உதவியளிக்க வாகனங்கள் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பொலீஸ் நிலையத்துக்குச் சொந்தமான வாகனம் திருத்த வேலை களுக்காக காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு இதுவரை பொலீஸாரிடம் மீளக் கையளிக்கப்பட வில்லை என்றும் -

இதனால் பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் செல்வோர் பொலீஸாரை அழைத்துச் செல்வதற் காக வாகனம் கொண்டு செல்ல வேண டியுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ-117)

## தோட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

இடம்பெயர்வினால் தொழில்களை இழந்த பளைப் பிரதேச மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையின் தென் னந்தோட்டங்களில் கடமையாற்றிய பாதுகாவலர்கள், தொழிலாளர்கள் ஆகி யோருக்கு மீண்டும் வேலை வழங்கப் படவுள்ளது.

இதேவேளை - மேற்படி விடயம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பளையில் இயங்கும் வேம் பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் நடைபெறுமென சபை பொறுப்பதிகாரி கு.தவரட்ணசிங்கம் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்வின் முன்னர் சபையி னால் பராமரிக்கப்பட்டு வந்த 300 ஏக்கர் தென்னந்தோட்டங்களில் இத்தாவி லில் உள்ள 70 ஏக்கர் காணியில் முற்றாக தென்னைமரங்கள் அழிக்கப் பட்டுள்ளன என்றும் -

ஏனைய தோட்டங்களிலும் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள் ளன என்றும் - அவர் மேலும் தெரிவித் தார்.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தலைவர் கலந்துகொள்வார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)



## ROOM AT THE TOP

We are a 25 year old Company with an excellent track record for our technical excellence and customer support.

Due to the restructuring of our Company to cater for the accelerated development of the region and to meet the local and global requirements for our products we are looking for a proactive self motivated individual who is committed to the development of the region, to head our operations and lead a team of engineers.

The ideal candidate should have excellent communication skills and at least 10 years experience in a management capacity in the private sector.

The successful candidate will be offered an attractive remuneration package.

Please forward your application indicating two (2) non-related referees on or before 30th of November 2002 to:-

The Managing Director,
**Promoters Engineering Company Limited,**
No. 844, Point Pedro Road, Nallur, Jaffna.


உ
சிவமயம்

## நினைவு நூல் வெளியீடு


கடந்த 05.11.2002இல் அமரத்துவமடைந்தவரான
எமது அன்புத் தெய்வம்
**ஸ்ரீமதி குகதாஸக் குருக்கள் நாகலட்சுமி அம்மாள்**
அவர்களது நினைவாக
ஸ்ரீ சிவ ஸஹஸ்ர நாமாவளி
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமாவளி

ஆகிய இரு நூல்கள் வெளியீடு இன்று (17.11.2002) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

- குடும்பத்தினர்.

(10695)


License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

Access Graphics

ஏக முகவர்கள்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. 337286 (நேரடி), 324261-5, 337263-5
பெக்ஸ். 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா விஸ்வலிங்கம்

(சரவணை)

புங்குடுதீவு கிழக்கு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கு, வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஸ்வலிங்கம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்) அவர்கள் 15.11.2002 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரனும் காலஞ்சென்ற செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தசுரபி (குணம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் திருமதி ந.கனகாம்பிகை (புங்குடுதீவு), காலஞ்சென்றவர்களான க.முத்துலிங்கம், இலட்சுமணம் (இந்தியா), சந்திரபாலன் (புங்குடுதீவு), வன்னியசிங்கம் (ஜெனீவா), கனகமணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்), நடராசா (இளைப்பாறிய அதிபர் - புங்குடுதீவு), காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தசிவம் (சட்டத்தரணி - கொழும்பு), திருமதி ப.அமிர்தவல்லி, கருணானந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ந.இளங்கோ அவர்களின் அன்பு மாமனாரும் திருமதி பாலகௌரி அவர்களின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை 456, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*456,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
வி.அமிர்தசுரபி (மனைவி),
சகோதரி, மைத்துனர்.

(10694)

### திருமதி பொன்னையா இலட்சுமிப்பிள்ளை

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இலட்சுமிப்பிள்ளை 15.11.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் ந.செல்வராணி, த.புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கனகரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் சிறியதாயாரும் சி.நவரத்தினம், சி.தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற அன்னபூபதி, தவமணி ஆகியோரின் மாமியாரும் ஜெயசீலன் (லண்டன்), கலாமாலினி (லண்டன்), நவநீதன் (ஜேர்மனி), மேனகா (ஜேர்மனி), கலாதரன் (லண்டன்), பார்த்திபன், துஸ்யந்தினி, கேமந்தினி, பிரதீபன் (ஜேர்மனி), சடகோபன் (ஜேர்மனி), கார்த்திகா (ஜேர்மனி), கனகலிங்கம், கமலதாசன், கேமலதா, செல்வரதி, ஜெயகாந்தன் (லண்டன்), ஜெயதீசன், ஜெயந்தினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சாருகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
சி.நவரத்தினம் (மருமகன்)

(10696)

# MICRO PC SYSTEMS

## நிறுவனம் இடம்மாற்றம்

எமது வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!

*அன்புடையீர்!*

எங்கள் நிறுவனம் இன்று (17-11-2002) ஞாயிறுமுதல்
175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது
என்பதை அறியத்தருகின்றோம்.

Web: www.mipaq.com - Tel.: 077-7308417 - நிர்வாகம்.

(10685)


ஓம்
ஜெய் பிரேமசாந்தி!

# 51ஆவது ஜெயந்தி தினம்

**17.11.2002**



## அருள்மிகு
## சுவாமி பிரேமானந்தா மகரிசி

*அன்பால் எம்மை ஆரத்தழுவி இல்லிடம் தந்து ஈகையும் உவந்து*
*உள்ளத்தில் கள்ளமிலா ஊக்கமும்தந்து எண்ணிலாக் கனவுகளை*
*ஏற்றமுடன் காத்து ஐயம்பட்டவரை ஒன்றாக இணைத்து*
*ஓராது தர்மம்காத்து ஔடதம்தந்து நிற்கும்*
*அஃதின்று காண்கின்ற அகவை ஐம்பத்தொன்றில்.*

அகிலமெலாம் பரவிப்படர்ந்து ஆன்மீகநெறி பரப்பிவரும் சுவாமி பிரேமானந்தா நிலையங்களில் குருதேவரின் ஜெயந்தி தினம் கொண்டாடப்படும் இன்றைய தினத்தில் சுன்னாகம் அருள்மிகு ஹரிகர புத்திரர் (ஐயனார்) தேவஸ்தானத்தில் சுவாமிகள் பெயரால் முற்பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று நண்பகல் எமது ஆச்சிரமத்தில் மதியபோசனம் இடம்பெறும். தொடர்ந்து பிற்பகல் 3மணியளவில் சுவாமிகள் பாதபூசை, திருஊஞ்சல், பஜனை வழிபாடுகளும் நடைபெற குருதேவர் திருவுள ஆசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்திருநாளில் கடந்தகால அமங்கல சம்பவங்களை துறந்து நிரந்தர சமாதானம், அமைதி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பூபாலகிருஷ்ண ஆச்சிரமம்,
*கே.கே.எஸ். வீதி,*
*சுன்னாகம், வட இலங்கை.* (C/24924)

திருமதி
நடராசா பாக்கியலட்சுமி
சுவாமி பிரேமானந்த நிலையம்,
இலங்கை.
வடமாநில ஒருங்கிணைப்பாளர்.


## வீடு வாடகைக்கு தேவை

வாகனத்தரிப்பிடம் மற்றும் சகலவசதிகளுடன் கூடிய வீடு யாழ். நகரப் பகுதியில் வாடகைக்கு தேவை.

தொடர்பு-T.P. No. 021-2223687

(10706)

## விற்பனைக்கு

SHARP இன புறொஜெக்ரர் (XV-325 P.1.5X) விற்பனைக்குண்டு.

*தொடர்பு:-*
**சுதர்சன் வீடியோ,**
*புகையிரத நிலைய வீதி,*
*கோண்டாவில்.*

(10704)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறை களுக்கமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும்.
இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=

**BHARATHI PATHIPPAKAM**
OFFSET PRINTERS
*430, K.K.S. Road, Jaffna.*
*T.Phone : 021 222 3081*

## லஷ்சுமி இணுவில்

விஜய், சிம்ரன், மணிவண்ணன் நடிப்பில்
**துள்ளாத மனமும் துள்ளும்** (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே)

(10701)

## நாகம்ஸ் சுன்னாகம்

M.G.R., சரோஜாதேவி, நம்பியார் நடித்த
**கலங்கரை விளக்கம்** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு
விசேட காட்சி 6.30 (புதிய நேரம்)

(10681)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

கமல், சிம்ரன் நடித்த **பஞ்ச தந்திரம்** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்
UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)

(C/23617)

## ராஜா யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த

**வில்லன்** (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30
விசேட காட்சி: 9.30 (புதிய நேரம்)


# பிற்போடப்பட்டுள்ளது

17.11.2002இல் நடைபெறவிருந்த சங்கத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

**பழைய மாணவர் சங்கம்**
*யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம்* கௌரவ செயலாளர்

(10702)


# The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna

## Diploma Courses

- *Diploma in Microsoft Office*
- *Diploma in Desktop Publishing*
- *Diploma in Information Technology*
- *Diploma in Software application*
- *Diploma in Photo Graphic*
- *Diploma in Programming*
- *Diploma in Kids Course*
- *Diploma in Studio Designing*

## Certificate Courses

- *Microsoft Word*
- *Microsoft Excel*
- *Microsoft Access*
- *Auto CAD 2000*
- *Microsoft Visual Basic 6*
- *Adobe Page Maker 6.5*
- *Corel DRAW 9*
- *Adobe Photo shop*

வகுப்புக்கள் யாவும் 23-11-2002 அன்று ஆரம்பமாக இருப்பதால் 22-11-2002 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

நிர்வாகம்


# கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது சங்க நிர்வாக சபை உறுப்பினராகிய
திருமதி கௌரி கணேசலிங்கம் அவர்களின் அன்புக் கணவர்

## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

அவர்கள் காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(C/24926)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில்
08 - 06 - 1957



அரக்கனின் அழிப்பில்
28 - 11 - 2001

## ஏரம்பு பேரம்பலம்

(யாழ்/பல்கலை ஆய்வுகூட உதவியாளர், தாவரவியற்றுறை)

திதி : திரயோதசி 17.11.2002

ஆண்டொன்று சென்றாலும் அணையாத திருமுகமே!
காலங்கள் ஓடினாலும் உன் நினைவலைதான் ஓடிடுமா?
தன் பிள்ளை போல் ஊர் பிள்ளைகளை வளர்த்தவரே!
உம் பிள்ளைகள் நாம் ஏங்குகின்றோம்!
தரணியிலே எம்மை தனியாக தவிக்கவிட்டு - எங்கு சென்றாய்?
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த
அறவழித் திருமகனே ஆண்டுகள் பல சென்றாலும்
அழிந்திடுமோ உன் நினைவு...!


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வைபவத்தில் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*198/1, பொன்னப்பா லேன்,*
*ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.* (10703)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரன் குடும்பத்தினர்
மற்றும் மச்சான்மார்.

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
27.11.1949

உதிர்வு
17.11.1994

## *அமரர்*
## சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர்,
கனகா பத்திரிகை விற்பனை அகம்,
திருநெல்வேலி)

திதி : 17.11.2002

எட்டு ஆண்டுகள் போயின போதிலும்
எம் விழி நீரின்னும் காய வில்லையே!
கட்டி யணைத்து முத்தங்கள் பொழிந்திட
கருணை வடிவமே வந்திடம் பக்கமே!

உங்கள் பிரிவால்
இன்றும் துயருறும்:
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

நிரந்தர முகவரி:
*'கனகா இல்லம்'*
*கைதடி கிழக்கு, கைதடி.*

(10698)

தற்போதைய முகவரி:
*இல. 60, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்

## செல்வன் யதுநந்தன்

அவர்களின் அன்புத் தந்தையார்

## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**A/L 2002**
உயிரியல் பிரிவு பாடசாலை நண்பர்கள்.

(10708)

### ஏழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- புதிய அமைச்சர் நியமனங்களை எதிர்க்கின்றபோதிலும் அரசுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் நோக்கோடு இந்த நியமனங்களை ஏற்றுக்கொள்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிச்சந்திர ராஜ கருணாவிற்கு தற்போது வழங்கவிருக்கும் அமைச்சுப் பதவியை விட வேறு அமைச்சை ஒதுக்கினால் சிறந்தது என்றுள்ளது. (ம-12)

### கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (எ)

### சொற்பொழிவு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு சிந்மய மிஷனின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி சுவாமி ரமண சைத்தன்யர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-90)

# காரசாரமான கருத்துப் பரிமாறல்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் உபகுழுவின் யாழ். மாவட்ட குழுக் கூட்டம் மிகவும் காரசாரமான கருத்துப் பரிமாறல்களுடன் எட்டு மணி நேரம் இடம்பெற்றது.

முகமாலை சூனியப்பிரதேசத்தில் இக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.15 மணிவரை தொடர்ந்தது.

அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட கொட்டகைக்கு பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகள் முற்பகல் 9.45 மணிக்கு வந்து சேர்ந்து தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

போராளிகள் பாதுகாப்பு வழங்க கேணல் தீபன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழு முற்பகல் 10 மணியளவில் அங்கு வந்து சேர்ந்தது.

இதையடுத்து கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் இருதரப்பினருக்கும் இடையே காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

கூட்டத்தை ஒட்டி விடுதலைப் புலிகளின் போராளிகளும், காவல் துறையினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையில் படையினரும் அங்கு காணப்பட்டனர்.

போராளிகளும் படையினரும் சரளமாகக் கலந்து பேசிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான படைத்தரப்புக் குழுவில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, யாழ்.மாவட்ட பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, தளத் தளபதிகளான பிரிகேடியர் சமரசிங்க, கேணல் ஜயதிலக, லெப்.கேணல ஜயசேகரா, வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, விமானப் படையைச் சேர்ந்த குறுப் கப்டன் ஹேலித குணதிலக, முன்னாள் பொலீஸ் அத்தியட்சகர் மஜித், யாழ். பிரதிப் பொலீஸ்மா அதிபர் விதானகே, புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுச் செயலாளர் ஏ.ஜெயரத்தினம் ஆகியோர் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தலைமையிலான குழுவில் கடற்புலிகளின் பிரதித் தளபதி லெப். கேணல் செழியன், கடற்புலிகளின் வலிகாமம் அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் இனியவன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, புலிகளின் சமாதானச் செயலணிச் செயலாளர் புலித்தேவன் மற்றும் தயாமாஸ்ரர் ஆகியோர் புலிகள் தரப்பில் கலந்துகொண்டனர். (ம-3-8)

### விரிவுரை

வீடுகளில் உருவாகும் குப்பை, கழிவுகளை கையாளுதல் பற்றிய செயல்முறையுடன் கூடிய விரிவுரை ஒன்று நாளை பிற்பகல் 3மணி முதல் 5மணிவரை நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஜி.ரி.இசற் அமைப்பின் ஆதரவுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் பொறியியலாளர் திஸ்ஸ டி சில்வா விரிவுரை நிகழ்த்துவார்.


ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ் - ஈஸ்வரன் ரேடர்ஸ்

யாழ்.நகரில்
சைக்கிள் விற்பனையில்
முன்னணி வகிப்பவர்கள்



ஈஸ்வரன் ரேடர்ஸ்

HERO - LUMALA நீடித்த பாவனைக்கு
நீங்கள் என்றும்
தயங்காது வாங்குங்கள்

HERO CYCLES LIMITED
THE LUMALA CYCLE ALL STEEL

ஹீரோ, லுமாலா
சைக்கிள்கள்



✱ ஹீரோ குடும்ப அங்கத்தவராக அங்கீகரிக்கப்பட்ட
யாழ்.மண்ணில் முன்னணி வர்த்தக நிறுவனம் இதுவே!

✱ யாழ். - கொழும்பு - யாழ். போக்குவரத்துச் சேவையில் பொருள்களை
உடனடியாகத் துரித கதியில் பெற்றுக்கொள்ளலாம்.

✱ அரச ...ணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் ...ருக்கும் இலவச (பொருள்கள்) காப்புறுதியுடன் கூடிய துரித சேவைகள்!

அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஈஸ்வரன் ரேடர்ஸ்

போக்குவரத்துச் சேவைத் தொடர்புகளுக்கு:- (C/24894)

| யாழ்ப்பாணத்தில் | வவுனியாவில் | கொழும்பில் |
|---|---|---|
| 69, கஸ்தூரியார் வீதி, | 148, கண்டி வீதி, | 132, டாம் வீதி, கொழும்பு - 12 |
| T.P: 021-222-2813 | T.P: 024-22497 | T.P: 074-714312 |

HOT LINE : T.P : 0777 - 674119



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
ஒரிஜினல் ரகன் CD
★ சொல்லமறந்த கதை
9மணிமுதல் 1மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.
புதிய படப் போஸ்டர்கள்
விற்பனைக்குண்டு.
அல்டி எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.



இளமை மற்றும் அழகின் ரகசியம்




பயோட்டின் -H

உங்கள் கூந்தல், சருமம் மற்றும்
நகங்களின் ஊட்டத்திற்கு...

தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

Biotin - H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே Biotin - H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது.

பயோட்டின் - H
விஞ்ஞான சான்று பெற்றது. பக்க
விளைவுகள் இல்லை.

(C/24920)

ஏக விநியோகஸ்தர் : ஜெகன் பார்மஸி, யாழ்ப்பாணம். T.P.:222 3191
சந்தைப்படுத்துவோர் : ARKEM கொழும்பு. T.P. : 470290



எமது புதிய ஒரிஜினல்
வீடியோ CD வெளியீடு
சொல்லமறந்த கதை
ITN
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
சேரனின்
சொல்லமறந்த கதை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/24928)



நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது

புரோசிங் (PROZINC)

★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்




புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.

புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.

புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.

தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு.Tel: 470290, 071-341956

(C-24531)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வாசகர் திருமுகம்

## சமாதான நீதிவான்கள் நியமனத்தில் அரசியற் கட்சி சார்புப் போக்கு

குடாநாட்டில் மீண்டும் ஒரு தொகுதியினருக்கு சமாதான நீதிவான்கள் நியமனம் வழங்கப்பட்டிருப்பதையும் அதற்காக அவர்களுக்கு எடுக்கப் பட்டுவரும் பாராட்டு விழாக்களையும் பத்திரிகைகள்மூலம் அறிய முடிகிறது. அதேவேளை 'சமாதான நீதிவான்கள்' என்று செல்லப்படுவோர் சமாதானம், நடுநிலைமை, ஒற்றுமை, சார்பின்மை இவற்றைக் குலைத்து விடும் முயற்சியில் ஈடுபட்டுவருவது பற்றிய சேதிகளையும் அறிய முடிகிறது.

'மின்சாரசபை ஊழியர்களை கடமை செய்யவிடாது தடுத்தார்' என்று ஒரு சமாதான நீதிவான் பற்றிய செய்தியையும் படித்தோம். திருநெல்வேலி சிவன் வீதியில் அண்மையில் இடம்பெற்ற சைக்கிள் - கார் விபத்தின் போது சமாதான நீதிவான்கள் இருவர் தலையிட்டுப் பக்கச் சார்பாக வாக்குவாதம் புரிந்திருக்கின்றனர். இது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதை நேரில் காணமுடிந்தது.

தகைமையும் பக்குவமும் இல்லாத பலருக்கு அவர்களது பெயருக்கு பின்னால் 'ஜே.பி.' சேர்க்கப்பட்டுள்ளது. குடாநாட்டிலிருந்து எம்.பிமார்கள் தெரிவுசெய்யப்படும் நிலைமை உருவாகிய பின்னரே ஏராளமானோருக்கு ஜே.பி. பதவிகள் கிடைக்கின்றன; வாரி வழங்கப்படுகின்றன என்று கூடச்சொல்லலாம்.

இந்தத் தடவை ஜே.பி. பட்டம் பெற்றவர்களில் பலர் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகளின் பின்னால் திரிந்து அவர்களுக் காக வாக்குச் சேர்த்தவர்கள் என்பதும் இன்னும் சிலர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கட்சிகளின் சார்பில் போட்டியிடத் தமது பெயர்களை இரகசியமாகக் கொடுத்துவிட்டு 'பொதுசேவை' புரிபவர்கள் என்பதும் பொதுமக்கள் அறிந்த விடயம்.

பொதுச்சேவை புரியும் நான்கு பொதுநிறுவனங்களின் காகிதத் தலைப்புகளில் தங்கள் பெயர்களைத் தக்கவைத்துக் கொண்டிருப் போருக்கு எம்.பிமாரின் சிபாரிசுடன் ஜே.பி. பட்டங்கள் கிடைக்கின்றன.

அவர்கள் அடுத்த தேர்தலின்போது கட்சிக்காக உழைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எம்.பிமாரும் சிபாரிசு செய்கின்றனர்.

பெருமை நிறைந்த இப்பதவி கீழ்த்தரமாக மாறிவரும் நிலை கவலைக்குரியது.

நீதி அமைச்சு கண்திறக்கவேண்டும். கண்ணை மூடிக்கொண்டு ஜே.பி. பதவி வழங்குவதை நிறுத்திவிடவேண்டும்.

பிரிட்டிஷ் காலணித்துவத்தின் எச்சங்களில் ஒன்றுதான் இந்த ஜே.பி. பதவி. போரினால் சிதைவடைந்த இங்கிலாந்தில் பொதுமக்களின் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வுகளைக்கண்டு தேசத்தை மீண்டும் அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் நோக்குடன் பிரிட்டிஷ் நிர்வாகம் ஏற் படுத்திய பதவி இன்று சமாதானத்தின் பெயரால் கேலிக்கூத்தாகி வருவது கவலைக்குரியது.

*திருநெல்வேலி வளாகம்.* **எம்.எஸ்.நாதன்.**

## கரவெட்டி தபாலகத்தில் குறைபாடுகள் எப்போது நீங்கும்?

கரவெட்டிப் பிரதேசத்தில் தலைமை தபால் காரியாலயம் நீண்ட காலமாகத் தனியார் கட்டடம் ஒன்றில்தான் இயங்கிவருகிறது. மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் தபாலகமும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்தபாலகத்திற்கு தினந்தினம் நூற்றுக்கணக்கான மக்கள் வந்து போவார்கள். குறிப்பாக மாணவர்கள், உதவிப்பணம் பெறுபவர்கள், வேலைவாய்ப்புத் தேடுபவர்கள், முத்திரை வாங்குபவர்கள் இவ்வாறு பல தேவைகளை இங்கே நிறைவேற்றுகின்றனர். அந்த அளவுக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் கரவெட்டி தபாலகத்தில் பல குறைபாடுகள் உள்ளன.

I. அலுவலகத்தில் ஐந்து பணியாளர்கள் சேவை செய்யவேண்டிய இடத்தில் தலைமை அதிகாரி உட்பட மூவர் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதனால் பொதிகள் பதிவுசெய்யச் செல்லும் மக்களும், கடிதங்கள் பதிவுசெய்யச் செல்லும் மாணவர்களும், உதவிப்பணம் பெறச்செல்லும் முதியவர்களும் நீண்டநேரம் காத்துநிற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

II. தற்போது மாரிமழை பெய்யத் தொடங்கிவிட்டது. கரவெட்டி தபாலகக் காரியாலயத்திற்குள் மழைநீர் வடிகிறது. எங்கு நிமிர்ந்து பார்த்தாலும் ஓட்டையும் வெடிப்புமாகத்தான் காட்சியளிக்கிறது. இதனால் மக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் தமது தேவைகளைப் பூர்த்திசெய்கின்றனர்.

III. ஒரேநேரத்தில் பல வேலைகளைச் செய்யவேண்டி இருப்பதால் பணியாளர்களும் பொறுமை இழக்கின்றனர்.

IV. தபால் விநியோகப் பணிகளிலும் ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன. எனவே, இப்படிப்பட்ட பல குறைபாடுகள் கரவெட்டித் தபாலகத்தில் உள்ளன. இதை வளரவிடாது உடனடியாக உயர் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வீர்கள் என்று கரவெட்டி வாழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

*துன்னாலை.* **எஸ்.குமார்.**

## கல் உடைக்கும் ஆலைகளால் சூழலுக்குப் பெரும் பாதிப்பு

அண்மையில் 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்த 'யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி இவ்வருட இறுதிக்குள் புதிய இடத்தில் நிரந்தரமாக இயங்கத் தொடங்கும்' என்ற விடயம் பலருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால், அதற்கு முன்னர் அப்பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் கல் உடைக்கும் ஆலைகளை வேறு இடத்துக்கு மாற்ற உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்குரிய பல்வேறு காரணங்களையும் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

மேற்படி கோப்பாய் - இராச வீதியில் இயங்கிக்கொண்டிருக்கும் கல் உடைக்கும் தொழிற்சாலைகளால், அப்பகுதியிலுள்ள பெரிய விவசாய நிலங்கள், பயிர்கள், கிணறுகள், குடியிருப்புகள் என்பன மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி ஆலைகளை வேறு இடத்துக்கு மாற்றும்படி உள்ளூர் நிர்வாகத்திடம் பலரும் பலமுறை விண்ணப்பித்திருந்தும் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. பொதுச் சுகாதார அதிகாரிகளும் பாராமுகமாக இருந்து வருகின்றனர். தற்சமயம் போர்ச் சூழல் ஓய்ந்து பலர் விவசாயம் செய்யத்தொடங்கியுள்ளனர். அவ்வீதியினூடாகப் பயணிப்போர் தம் கண்களை மூடிக்கொண்டு விபத்துக்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கூட ஏற்படுகின்றன. எனவே, பொதுநலன்கருதி மேற்படி விடயத்தைக் கருத் திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**க.கருணாகரன்** *(மாணவன்)*

---

### கல்வி வலயங்களில் பணிபுரியும்

# தற்காலிக பணிப்பாளர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்

### - சுற்றறிக்கை கிடைத்தது -

மண்டைதீவு,நவ.17

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் பிரதிக் கல்வி பணிப்பாளர்களாகவும், பாட ரீதியான உதவிக் கல்விப் பணிப் பாளர்களாகவும், கோட்டக் கல்வி அதிகாரிகளாகவும் தற்காலிகமாகக் கடமையாற்றிவரும் அதிகாரிகளின் விவரங்களை மாகாணத் திணைக் களம் கோரியுள்ளது.

இந்தப் பதவிகளுக்கு அதிபர் சேவையில் தரம்I, தரம்2-I, தரம்II அதிபர்களும், பட்டதாரி உதவி ஆசிரியர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக [illegible] நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை - மேற்குறிப்பிட்டவர்களின் சுயவிவரங்களையும், சேவைக் காலத்தையும் உடனடியாக அனுப்புமாறு விடுக்கப்பட்ட பணிப் புரைக்கிணங்க, இவர்களது விபரங்கள் மாகாணக் கல்வித் திணைக் களத்துக்கு அவசரமாக அனுப்பப்பட்டுள்ளன என தீவகக் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அதிகாரிகள் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இற்கு உள்வாங்கப்படவுள்ளனர் என்றும் -

இந்தத் தரத்துக்கு உள்வாங்கப் பட்டுபவர்களின் தற்போதைய சம்பளம் அதிகமாக இருந்தால், அது குறைக்கப்படமாட்டாது என்றும் -

தற்போதைய சம்பளத்தையே அவர்கள் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்கள் என்றும் - மாகாணக் கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-88)

## சிங்கர் காட்சியறை நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

'சிங்கர்' நிறுவனத்தின் புதிய காட்சியறை நேற்று பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

நிறுவனத்தின் கடன் பிரிவு முகாமையாளர் பி.சிவாஜி நாடாவை வெட்டிக் காட்சியறையைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து இந்த வைபவத்தில் கலந்துகொண்ட பிரமுகர்களும் வாடிக்கையாளர்களும் காட்சியறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள் களைப் பார்வையிட்டனர்.

இங்கு சிங்கர், சிசில், அக்காய், சன்சுயி, ரி.சி.எல், ஜே.வி.சி, நஷனல், கென்வூட், ஹிற்றாச்சி உட்பட பல நிறுவனங்களின் பொருள்களான தையல்மெஷின்கள், துணிதுவைக்கும் இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், சமையலறைப் பாவனைப் பொருள்கள், கசற் றேடியோக்கள் எனப் பல்வேறு பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (எ-10-ரி)

### நினைவு நூல் வெளியீட்டுவிழா

யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் மு.கார்த்திகேசன் நினைவு நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை 4.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் கலாநிதி வி.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூலின் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் எம்.குமாரசாமியும், நூல் ஆய்வுரையை பேராசிரியர் எம்.ஏ.நு..மானும் நிகழ்த்துவர். (எ-10)

### கட்டாக்காலி கால்நடைகளால்

## தென்மராட்சி தெற்கில் நெற்பயிர்கள் அழிப்பு

தென்மராட்சி,நவ.17

காலபோக நெ[illegible] கொள்ள அனுமதி[illegible] வண்டுலோ, கோவிலா[illegible] குழி பகுதி வயல்களி[illegible] துள்ள நெற்பயிர்களைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன எனக் கூறப்பட்டது.

தென்மராட்சி தெற்கு அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் சிக்கியுள்ள கட்டாக்காலிகளே தினமும் வயல் பகுதிகளுக்கு வந்து பயிர்களை அழிக்கின்றன என இப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்[illegible] உயர் பாதுகாப்பு வலயத் [illegible]ப்பால் முட்கம்பிகள் ஊடா[illegible] செல்ல முடியாததாலும் [illegible] பகுதியில் மிதிவெடி அபாயம் காணப்படுவதாலும் - கட்டாக்காலிகளான ஆடு, மாடுகளைப் பிடிக்க முடியவில்லை என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளைக் கட்டாவிடின் இம்முறை நெற்செய்கையாளர்கள் பெருநஷ்டம் அடைய நேரிடலாமென்று, தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சின்ன வெங்காயச் செய்கை; வலிகாம விவசாயிகள் ஆர்வம்

வலிகாமம் தெற்கு,நவ.17

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப் பிரதேசங்களிலுள்ள தோட்டங்களில் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்வதில் தோட்டச் சொந்தக்காரர்கள் அதிக ஆர்வங்காட்டி வருகின்றனர்.

சின்ன வெங்காயம் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை அடுத்தே உள்ளூர்ச் சந்தைகளில் அதன் விலையும் அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

சந்தைப்படுத்தும் வசதி, வெங்காயத்தின் விலையேற்றம் என்பன தோட்டச் சொந்தக்காரர்கள் பலரை சின்னவெங்காயச் செய்கையில் அதிகம் ஈடுபடவைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வெங்காயத்தின் விலை உயர்ந்ததையடுத்து நன்கு முற்றாத அல்லது ஈரலிப்புத் தன்மையுடைய வெங்காயம் உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனைக்கென எடுத்துவரப்படுகின்றன. (எ-152)

## யுனிசெவ் அனுசரணையுடன் போஷாக்குச் செயற்றிட்டம்

வலிகாமம் தெற்கு,நவ.17

யாழ்.மாவட்டத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன், போஷாக்குச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவென தெல்லிப்பழை, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய மூன்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளரால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போஷாக்குக் குறைந்த குழந்தைகள், தாய்மார்கள் உள்ள ஐம்பது குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப் படவுள்ளன.

தெரிவுசெய்யப்படும் குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், நல்ல போஷாக்கு நிறைந்த மரக்கறிகளின் விதைகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், வீட்டுத்தோட்டத்தை நல்ல முறையில் பராமரிப்பதை ஊக்குவிக்கும் நோக்குடன் இவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

### கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய திருஞானசம்பந்தர் கான சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் நல்லை ஆதீன ஓதுவார்களில் ஒருவரும், அகில இலங்கைத் திருமுறைமன்ற அமைப்பாளருமான சி.கிருஷ்ணமூர்த்தி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (எ)

★ ★ ★

மானிப்பாய்,நவ.17

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் மூன்றாண்டுகளுக்கு மேலாக மஹோற்சவ காலத்திலும், ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் [illegible] பங்கு பற்[illegible] நவாலியூர் இளையதம்பி [illegible] தலைமையில் மேற்படி ஆல[illegible]ாவாகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அருட்கவி சீ.விநாசித்தம்பி 'சைவகுரபி' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கிக் கௌரவித்தார். (எ-90)

### பொதுக்கிணறு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

உரும்பிராய் வடக்கு பங்கரன் தோட்டத்தில் உள்ள பொதுக்கிணறு ஒன்று 80 லட்சம் ரூபா செலவில் பட்டினிக்கெதிரான இயக்கத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி விவசாயிகளின் நன்மைகருதி மேற்படி பொதுக் கிணறு புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

### கருத்தரங்கு

வடமராட்சி,நவ.17

வடமராட்சி கால்நடை வளர்ப்போர்களுக்கான 'கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வசீகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-173)

### நெடுங்குளம் வைரவர் ஆலயம் புனரமைப்பு

அரியாலை,நவ.17

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் அமைந்திருக்கும் ஞான வைரவர் ஆலயத்தைப் இப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து புனரமைத்துள்ளனர்.

யுத்த அனர்த்தங்களினால் பலத்த சேதமடைந்த இந்த ஆலயத்தின் மண்டபக் கூரைகள் உட்பட ஆலயத்தின் அனைத்துப் பகுதிகளுமே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

ஆலயம் புனரமைக்கப்பட்டதை அடுத்து மீண்டும் பூசை வழிபாடுகளை [illegible] ஏற்பாடுகள் செய்யப் [illegible]. (எ-17)

### [illegible]க் கட்டடத்தை பயன்படுத்த அனுமதி

வலிகாமம் தெற்கு,நவ.17

மருதனார்மடம் பொதுச்சந்தையின் புதிய கட்டடம் பூர்த்தியாக்கப்படாத நிலையில் விற்பனையாளர்கள் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்படி சந்தைக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதை அடுத்தே மேற்படி சந்தைப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்படாத நிலையில், விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வைத்து விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (எ-152)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பூவுலகில்
1927 - 05 - 10



விண்ணுலகில்
2002 - 10 - 15

## வல்லிபுரம் செல்வநாயகம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

**பாசமுடன் பெற்றீர்கள், பக்குவமாய் வளர்த்தீர்கள்!**
**நேசமுடன் எமைத்தூக்கி நெஞ்சினிலே வைத்தீர்கள்!**
**வீசு புயற் காற்றாக விபரீதம் வந்தாலும்**
**மூசியதை மூழ்கடித்து முழுமனதாய் காத்தீர்கள்.**

**படுக்கையிலே படுத்தாலும் பாசம் மறைந்திடுமோ?**
**துடுப்பிழந்த தோணியாய்த் துன்பத்தில் துவழ்கின்றோம்**
**மடையாகப் பெருகுகின்ற கண்ணீரை யார் துடைப்பார்?**
**சந்நிதியான் தாள் சேர்ந்து சாந்தி அடைவோம்.**

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியைக்கேட்டு உடன்வந்து ஆறுதல்தந்து உதவிகள் புரிந்தோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகளைப பிரசுரித்தோருக்கும், இறுதிக்கிரியைகளின் போது தோளோடுதோள்நின்று உதவி புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அரச வீதி,உரும்பிராய் கிழக்கு.*

நிரந்தர முகவரி:
*கலைமகள் வீதி,*
*தையிட்டி,*
*காங்கேசன்துறை.* (C/24916)

*பிரிவால் துயருறும்:*
**மனைவி,**
**பிள்ளைகள்,மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## வணிகர் கழகத்தின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தைக் கட்டடக் கடைகளின் முன் பகுதிகளிலும், நடைபாதைகளிலும் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருள்களை உடன் அகற்றி உதவுமாறு யாழ். வணிகர் கழகம் வர்த்தகர்களைக் கேட்டுள்ளது. இது தொடர்பாக மேற்படி கழகம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்களுக்கு இட நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகவும் -

எனவே, நாளை திங்கட்கிழமைக்குப் பின்னரும் அகற்றப்படாதிருக்கும் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-ரி)

## சிரமதானம்மூலம் கட்டட இடிபாடுகள் அகற்றப்படுகின்றன

கொழும்புத்துறை கிழக்கு பகுதியில் யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளை இப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் அகற்றி வருகின்றனர்.

கொழும்புத்துறை கிழக்கின் 2ஆம, 3ஆம், 4ஆம் குறுக்கு வீதிகளில் சேதமடைந்திருக்கும் பொதுமக்களின் வீட்டு இடிபாடுகளே தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

இந்தச் சிரமதானப் பணிக்கு யாழ். மாநகராட்சி மன்றம் தனது வாகன வசதிகளை வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## மதகு சேதம்

கனகன்புளியடிச் சந்தியிலிருந்து சரசாலை ஊடாக பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு பலத்த சேதமடைந்ததையடுத்து மேற்படி வீதியினூடாகப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (எ-117)


## CAREER OPPORTUNITIES

### Civil Engineer

We are looking for a dynamic self motivated person with Civil Engineering qualifications with at least 15 years experience in the private sector building industry.

The ideal candidate should have the following qualifications and experience B.Sc. Degree in Civil Engineering or equivalent. Minimum 6 years work experience in design / construction.

### Auto – Cad Draughtsman

Those who have undergone a course in mechanical draughting by using Auto - cad R14 with 3/5 years experience may apply. Mechanical workshop experience and knowledge in Auto-cad 2000, Corel draw, Pro engineering etc. will be an advantage.

### Secretary

Candidates should have an excellent command of the English language. He/ She should be self motivated. Computer literate, have enough experience in a similar position and be prepared to work long hours. Stenography skills are a must.

*Candidates should forward their applications highlighting their achievements and strengths indicating two (2) non - related referees.*

The Managing Director,
**Promoters Engineering Company Limited,**
No. 844, Point Pedro Road, Nallur, Jaffna.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 15.10.2002 அன்று சிவபதமடைந்த ஓய்வுபெற்ற ஆசிரியரும், சிறந்த சமூகசேவையாளரும், எனது மாமனாருமாகிய

## வல்லிபுரம் செல்வநாயகம்

அவர்களுடைய 31ஆம் நாள் நினைவுதினத்தை முன்னிட்டு *உரும்பிராய் கணபதி நிறுவனத்தின்* சார்பிலும், ஊழியர்கள் சார்பிலும், கணபதி நிறுவனத்தின் நிர்வாகி அவர்கள் வழங்கும் நினைவஞ்சலி,..

குறைவிலா அறிவும் குன்று போல்திடமும்
பழுதிலா நீதியும் பண்புசால் குணமும்
நிறைவுடன் கொண்ட
நிர்மல ரூபன் எங்கள் ஆசானே!
உங்கள் புத்திரியை மணம் கொண்டு
உங்கள் மருமகன் ஆனது எனக்குப் பெருமை .
உற்றார், உறவினரை விட உலகில்
நியாயம் ஒன்றே பெரிதென்று
யார்க்கும் எவர்க்கும் தலைவணங்காது
உறுதியுடன் வாழ்ந்த உத்தமரே!
ஊரெழுவில் அரைக்கும் ஆலை
உலாவிவரும் பாரஊர்தி
சீர் நிலைக்க வாழ்ந்து எமக்குச்
சிறந்த வழி காட்டி நின்றீர்!
நீங்கள் இட்ட படிகள் மூலம்
நிமிர்ந்து உயர்ந்து வளர்ந்து விட்டேன்.
எமக்குப் பெரிதும் வழிகாட்டி - இன்று
இறைவன் பதம் சேர்ந்து விட்டீர்!
உயிருள்ளவரை உங்களை
ஒருபோதும் மறக்கேனே!
இறைபதம் அடைந்து இன்று
முப்பத்தோர் நாளில் நாம்
இறைஞ்சி உமைப் பணிகின்றோம்
என்றும் எமக்கருள் விரே.

*கணபதி நிறுவனம்,*
*உரும்பிராய்.* (C-24917)

செ.தவேந்திரநாதன் (உரிமையாளர்),
ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சௌமியா சிவசுதன் (குவிதா - HSBC)

வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சௌமியா சிவசுதன் (குவிதா - HSBC) அவர்கள் 13.11.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் Dr.சிவசுதன் (NHSL) அவர்களின் அன்பு மனைவியும் யோகநாதன் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் தம்பதிகளின் அன்பு மருமகளும் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சிறாப்பர்) தம்பதிகளின் அன்பு மூத்த பேர்த்தியும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிஐயா - நல்லம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் கிருஷ்ஷாணி, ஜஜிந்தா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21, 32ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6 இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை ஜயரட்ண மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் பிற்பகல் 1.00 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(C/24912) லயன் T.நடேசன் (உரும்பிராய்).

## திருமதி பொன்னுச்சாமி சிவபாக்கியம்

*(உரிமையாளர் - பரிமளா ஸ்ரோர்ஸ்,*
*மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். V.S.P.)*

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த திருமதி பொன்னுச்சாமி சிவபாக்கியம் நேற்று (16.11.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும் பாஸ்கரன், பரிமளாதேவி (ஜேர்மனி), பத்மாதேவி, பகவதிதேவி (லண்டன்), பற்குணதேவி, பத்மினிதேவி, உமாதேவி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அருமைநாயகி, தேவராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, இராமநாதன் (லண்டன்), சச்சிதானந்தம், சுந்தரமூர்த்தி, குமாரதாஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுந்தரலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபத்திரா, சுதர்சினி, பிரதீப், அஜந்தன், செவ்வந்தி, செந்தீசன், செந்தீபன், செந்துருவன், கௌஷிகன், கௌதமன், கஜன், சர்மிதா, ரஜீவன், சஜீவன், ராகவி, சங்கீதன், மிதுளா, டெசிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சிவசுந்தரம், சொர்ணலிங்கம், தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு (ப.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஆனைக்கோட்டை.* (10690) பொ.பாஸ்கரன் (மகன்).

## அருளானந்தம் தணிகாசலம்

2ஆம் ஒழுங்கை, பலாலி றோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளானந்தம் தணிகாசலம் அவர்கள் நேற்று 16.11.2002 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் இராசம்பாளின் அன்புக் கணவரும் கௌரிதேவி (நல்லூர்), மாணிக்கவாசகர் (யாழ்ப்பாணம்), வேதாசலம் (பிரான்ஸ்), வசந்தாதேவி (நுணாவில்), சந்திராதேவி (அளவெட்டி); கருணாசலம் (கண்ணன் - ஆறுகால்மடம்), செங்காதரன் (பிரான்ஸ்), விமலாதேவி (பிரான்ஸ்), மஞ்சுளாதேவி (யாழ்ப்பாணம்), உதயகுமார் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமிகு தகப்பனாரும் தம்பிராசா, புஸ்பராணி, ஜெயந்தி (பிரான்ஸ்), மகாராசா, வெற்றிவேல், வளர்மதி, ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1/3, 2ஆம் ஒழுங்கை,*
*பலாலி றோட்,*
*யாழ்ப்பாணம்.* (10691)

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

# கல்வி நிர்வாகப் பரீட்சை கொழும்பில்!

வலி.வடக்கு,நவ.17

இலங்கை கல்வி நிர்வாக சேவைக கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப் பம் கோரப்பட்டபோது யாழ்.மாவட்ட மும் பரீட்சை நிலையமாகக்கொள் ளப்படலாம் என அறிவிக்கப்பட்டிருந் தது. ஆனால், தற்போது அனுப்பி வைககப்பட்டுள்ள அனுமதி அட்டை களில் யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகள் கொழும்பிலுள்ள பரீட்சை நிலையத் திலேயே பரீட்சைக்குத் தோற்றவேண டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-86)


## சேவை நலன் பாராட்டு

கஜமுகன் பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியையாக 30 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றி, பாட சாலையின் அபிவிருத்திக்கும் அச்சுவேலிச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது உழைத்த நல்லாசிரியையே!

சிறு கொட்டிலாக இருந்த பாலர் முன்பள்ளிக்கு சொந்தமாக நிலம் தேடி, அழகான கட்டட வளம் தேடி, பாலர் மகிழ்ந்து விளையாட சிறுவர் பூங்கா நலம் தேடி, பாடசாலை வரலாற்றுடன் சேர்ந்து வாழும்
ஆசிரிய திலகமே!!

சிறுவரோடு சிறுவராக, பள்ளித்தா யாக, பள்ளிமுன் பருவத்தில் பால்மணம் மாறாக் குருத்துக்களுக்கு கல்வியின் அடித்தளத்தை உவந்தளித்த
உத்தமியே!!!

உமது சேவையை பாடசாலைச் சமூகம் என்றும் மறவாது!

ஊதியத்தை எதிர்பாராது சிறுவர் கல்விக் காக உழைத்த தங்களுக்கு நாம் தரும் சன்மானம் ஏதும் உண்டோ? நீங்கள் பல்லாண்டு நல்வாழ்வு நலமாக வாழ உலவிக்குள விநாயகர் நல்லருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.



செல்வி
மகேஸ்வரி பொன்னையா
(அமரா)
(பொறுப்பாசிரியை,
அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலை)

சேவை விவரம்

| | |
|---|---|
| 01-10-1972 | முதல் நியமனம் |
| 01-06-1990 | நிரந்தர நியமனம் |
| 03-11-2002 | ஓய்வு |

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(C/24904)



**சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்**
க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான
இலவச வழிகாட்டல் கருத்தரங்கு - 2002

இடம் : யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்

19.11.2002 செவ்வாய்க்கிழமை

| | | | |
|---|---|---|---|
| சமூகக்கல்வி | மு.ப. 9.30 | (பு.நே.) | திரு.எம்.வேலாயுதபிள்ளை |
| தமிழ் | பி.ப. 1.30 | (பு.நே.) | திரு.மகாலிங்கசிவம் |

23.11.2002 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | மு.ப. 9.00 | (பு.நே.) | திரு.மகேந்திரம் |
| வர்த்தகம் | பி.ப. 1.00 | (பு.நே.) | திரு.நந்தீஸ்வரன் |

24.11.2002 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | மு.ப. 9.30 | (பு.நே.) | திரு.இரா.செல்வவடிவேல் |
| ஆங்கிலம் | பி.ப. 1.30 | (பு.நே.) | திரு.எஸ்.சந்திரமௌலி |

அனைத்து மாணவர்களையும் பங்குகொண்டு பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இலவசமாகக் கையேடுகள் வழங்கப்படும்.

தலைவர்,
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்.

(C/24906)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா கந்தசாமி**

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு எங்களைவிட்டு அகலா.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(10672)


எத்தனை இனம்?
MAKE

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

எத்தனை வகை?
MODEL

என்றும் எப்போதும் ஒரேபதில்!

ENGINE GUARD
உங்கள் இயந்திரத்தினை மண், சேறு, கல் என்பவற்றின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கின்றது.


CD 100 SS

விசேட தள்ளுபடி
நவம்பர் 28 வரை.
உங்கள் வாகனப் பதிவுடன் இலக்கத் தகடும் இலவசமாகச் செய்துகொடுக்கப்படும்
(இதன்பெறுமதி ரூபா 1600/=).

விசேட நிபுணத்துவர்களின்
Free Inspection
& Service

இதோ! யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
HERO - HONDA நிறுவனத்தினர் மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இலவச சேவையை வழங்கவுள்ளனர்.

RG

முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்

(E/24905)

# இரத்தின கோயல்ஸ்

63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

விதியில் கவனயீனம் - சமாந்தர குறிஞ்லிப்பர் - பாரலர் குடும்பம்

# சுதந்திரமாய் பறந்து செல்ல...



## வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுச் செல்லுமுன் உங்களுக்கு ரூபா. 50,000 வரை கடன் வசதி.

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்று போகுமுன் ஏற்படும் செலவுகள் ஏராளம். டிக்கட் செலவு, மெடிக்கல் செக்கப் செலவு, காப்புறுதிச் செலவு, பயணச் செலவு என ஏகப்பட்ட செலவுகள்.

இச் செலவுகளை சமாளிக்கவும், வெளிநாடு செல்லுமுன் வீட்டுச் செலவிற்காக உங்கள் குடும்பத்திற்கு ஒரு தொகைப் பணத்தை கொடுத்துச் செல்லவும் இலங்கை வங்கியின் இக் கடன் திட்டம் உங்களுக்குக் கைகொடுத்து உதவும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான வீசா கிடைத்துள்ள நீங்கள் இலங்கை வங்கியின் இக் கடன் வசதியைப் பெறலாம்.

NRFC
இலங்கை வங்கி

இலங்கை வங்கிக்கு வெளிநாடுகளில் 5 கிளைகளும் 1500 தொடர்புடைய வங்கிகளும் இலங்கையில் 291 கிளைகளும் இருக்கின்றன.

சிகரத்தைத் தொட சிறகுகள் தரும்